T
6581
T. 6581
T. 6581.

உ

கடவுள் துணை.

# துய்யகேரளம்

## மூலபாடம்.

அந்தணர் குலத்தில் அவதரித்த

வேதலிங்கபட்டராற்

செய்யப்பட்டது.

இஃது

மயிலம்,

சுப்பிரமணியசுவாமிகளாற்

பார்வையிடப்பட்டு,

சென்னை-இட்டா

பார்த்தசாரதிநாயுடு

அவர்களாற்றமது

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1910.

சென்னை, ஆச்சாரப்பன் தெரு, நெ-84

முருகக்கடவுள் துணை.

# துய்யகேரளம்-மூலபாடம்.

## இலக்கிநபாவம்.

திருந்துமோரினக்கினத்தாற் சீர்த்தியுமூர்த்திமற்றும்
பொருந்துநற்பெலாபெலன்கள் புகலுறுதீர்க்கவாயுள்
வருந்துமோர்சிறிதுளாயு வாய்த்தலட்சணம்பெலன்க
ளிருந்ததுர்ப்பெலன்சுகங்க ளிகையிலக்கினத்தாற்சொல்லே. க

இலகியசுபக்கோளொன்றி லெய்திடலில்லையாகி
னலனுறநோக்கமற்ற நட்பிலாக்கொடியதீக்கோள்
பலமுறநோக்கினும் பனியுமாதவனும்போலாய்க்
குலநலங்கீர்த்தியாயுள் குறைவிலாவாழ்வுங்கூறே. உ

கூறியவிலக்கினாதி ராசியாதிபனைக்கொண்டு
மாறியசரீரவண்ணம் வருநலந்தீமைசொல்ல
வேறிலாமதிநவாச்ச மேவுங்கோள்பிலத்தைநோக்கித்
தேரியசரீரவண்ணந் தீதொடுநலனுஞ்செப்பே. ௩

செப்பியலக்கினக்கோடிரிகோணகேந்திரத்தி
னட்பர்தன்வீட்டிற்சார நன்மைக்கோள்கூடநோக்கத்
தப்பிலாச்சுபர்கள்ராசி தன்னிலேசேருமாகி
லொப்பிலாக்கீர்த்தியாயு ளுயர்ந்தவாழ்வுடையனாமே. ௪

மின்னியவிரண்டின்கோட்போய் மேவலக்கத்தின்மீது
மன்னிடைகீர்த்தியுண்டாம் வாக்குக்கொள்வாக்கிலுச்சந்
தன்னிகரில்லாக்கீர்த்தி தான்பனிரண்டாறெட்டி
லன்னவனிருக்கநோக்க வறிவில்சஞ்சலத்தனாமே. ரு

ஆனலக்கினத்தோனைன்பா னைந்தினிலமையவந்த
தானத்துக்கோளோடேனுஞ் சார்ந்திடக்குணவானாகு
மோனத்திறமைந்தைகீர்த்தி முருகனைவணங்குவோனா
மானைத்தவிழியினாளே மைந்தனால்வாழ்வுண்டாமே. ௬

வாழுமூன்றிடத்திற்கோட்போய் மருவிலக்கினத்தின்மீது
மீளுமிலக்கினத்தின்கோட்போல் மேவிடவன்றிநோக்கத்
தாழ்விலாதுடன்பிறந்த சகோதரங்கீர்த்திமானாய்
நாளுமிப்படிவாழ்வெய்து மென்ற[illegible]

நண்ணியசனனக்கோளு நலங்களொன்பானிற்கோளு
மெண்ணியதல்த்தேநிற்க வன்றெனின்மாறிநிற்கப்
புண்ணியமறையோன்பார்க்க பொருந்தியேபிறந்தசேய்க்கு
மண்ணிடைவருநாடொட்டு மரணமட்டுயர்ந்தவாழ்வே. அ

வாழ்விளக்கினத்தின்மீது வந்திடநாலின்கோளின்
ருழ்விலாநாலின்மேவிச் சார்கிலுந்தனிக்கோளோடே
வாழுமிவ்விரண்டுகோளு மிக்கதீக்கோணுக்காதே
லூழியங்கணக்குதேர்ந்த வித்தையாலுயர்ச்சியாமே. கூ

உயர்ந்தலக்கினத்தோனின்ற வோரைக்கீராறிலுச்ச
நியம்பியநட்புக்கோளே ழிருக்கலக்கினத்திராறி
னயங்கொளுமுச்சனேனு நட்புக்கோளேனுமண்ணிற்
றயங்கிடாதிருக்கநோக்கத் தரணியாளரசர்க்கொப்பே. ய

ஒப்பிலக்கினத்தீராறி லாறுறுக்குடையகோளுந்
தப்பில்லாவாக்குக்கோளுஞ் சார்ந்திடநீசத்தோடே
யிப்படிபெலவீனத்தை யிறையவனேக்கிப்பார்க்கி
னட்பிலாராசியந்தி நல்கியவாழ்வுண்டாமே. கக

உண்டாய்ச்சனனவீட்டுக் குடையவன்பார்த்தோன்மூன்று
விண்டோயுஞ்சரங்களாகில் வேறொருதேசத்தாரும்
வண்டாருங்குழலினளே வீருமூன்றுத்திரங்களாகிற்
பண்டாயுஞ்சுபமாம்வர்க்கம் பாக்கியமிகுதியாமே. க௨

ஆமெனும்லக்கினக்கோ ளதிகபாபக்கோளோடே
நாமமாறதனிற்சார ராசியுங்கொடியவீடாய்த்
தீயசேய்சனியுங்கூடிற் செய்யாதகிரிகைசெய்யு
மேன்மையுலாவுங்கூடின் மிக்கசண்டாளனமே. க௩

மிக்கலக்கினத்தாறெட் டீராறின்மேவுமாகிற்
றக்கவேசரீரநோவாஞ் சார்ந்திடும்ராசிக்கோளே
யொக்கவேசநிபோய்நோக்க உடலங்கணேவுமாகி
மைக்கருங்குழலினளே வருத்தனர்மறைவல்லோரே. க௪

வல்லிகேள்சத்துருக்கோண் மத்தியின்மூதற்கோள்வாழிற்
சொல்லுவர்மரணமட்டுந் துயரஞ்சத்துருவினலே
நல்லலக்கினத்திற்பாம்பாய் நாலிரண்டாறீராறே
மெல்லியின்முதற்கோளேகிற் றிசையங்கவீனமென்னே. க௫

என்னுமொன்றினிற்கோளாறு மிடத்துக்கோளுடனேகூடி
யுன்னியராகுகேது வோடொருதலத்தேநிற்க

தன்னுடல்சுகமில்லாமற் சஞ்சலமனத்தனுகி
மின்னனுய்வியாதியத்த ஞமெனவிளம்பலாமே. சசு

விளங்கலக்கினக்கோநின்ற ராசியாதிபனுமேலாய்த்
தளங்குகேந்திரத்திரிகோணஞ் சார்ந்திடிற்றம்மோடொப்ப
வளங்கிலக்கிலத்தோன்பார்க்க வரிசைவீட்டுடையகோடான்
களங்குறப்பின்னுறெட்டிற் காந்துறைபெலவான்காணே. கஎ

காணும்லக்கினககோள்பாபக் காரிகளுடனேகூடி
லாறுமெட்டொன்றினிற்கி னலமிலிசரீரமென்க
வீணுறுசெவ்வாயோடே மேவுபன்னிரண்டாறெட்டிற்
கோணமாரனுஞ்சார்கிற் கொடியரோகத்தன்கோதாய். கஅ

கோதிலக்கோட்டீலேறக் குழிவிக்குப்பருத்தகோச
மோதியராகுசேயல் ரோகமுண்டாகுமென்பார்
நீதியிற்சனியேயொன்றி னின்றிடிலண்டவாதந்
தீதுறுபாபர்முன்னேன் சேர்ந்திடக்கோபஞ்சேய்க்கே. கசு

சேயிலக்கினக்கோண்மாந்தி செய்யபன்னிரண்டிற்சாரிற்
காயந்துர்ப்பலந்தான்வேசைக் கலவியாலழிந்தகர்ம
ஞயகன்பாபரோடே நண்ணிடிற்காந்தியில்லான்
றூயகோள்பெலமாய்ப்பின்னே தோன்றிடக்காந்திசொல்லே. உ௦

சொல்லியவாரிற்கோளுந் தூயலக்கினத்திற்கோளு
மெல்லவேயாறினின்முன் மேனியில்வெள்ளையுண்டா
நல்லலக்கினக்கோளோடே ராகுவுங்கூடிநின்முற்
பில்லிவஞ்சனையும்பாம்பாற் பிழைகளும்பேசலாமே. உக

பேசுங்காலக்கினத்திற் பெருகியசுபக்கோனிற்கின்
மாசிலாநற்கோணேக்க மன்னவன்சுகவானென்ன
வீசியதீக்கோள்நிற்க மிக்கதீக்கோளுநோக்கிற்
றாசிலாமரணமட்டுந் துக்கவானென்றுசொல்லே. உஉ

சொல்லியவெள்ளிதேவாந் தூயகேந்திரகோணக்கே
னல்லலக்கினக்கோனிற்கி னல்லவர்சுபமேயெய்த
வெல்லையிற்சிறிதுநற்கோ ளிலக்கினந்தன்னைநோக்க
வல்லியேமத்தியந்த வயதிலேவாழ்வுண்டாமே. உ௩

வாழும்லக்கினத்தினற்கோண் மருவிடவாக்குகேந்திரத்
தாழ்வுறுபாபர்நிற்கச் சாதகலக்கினக்கோண்
மீளுநல்லுத்தமாங்க மேகினன்மின்னேகேளாய்
நாளிலேவியாதிதுக்க நன்மையந்தியத்தானண்ணே. உச

நண்ணியவிலக்கினக்கோ ணல்லோர்கள்ராசியேறப்
புண்ணியர்நோக்கவின்றேற் பொருகோபுரங்கமேறித்
திண்ணியமுதற்கோணிற்கச் சிறந்தசாதகர்க்குநன்மை
மண்ணினிற்பதிணறுக்கு மேலெனவகுக்கலாமே. உரு

வகுத்தலக்கினத்தைவெய்யோன் மற்றக்கோள்சிறிதுநோக்கின்
மிகுத்தசெல்வத்தன்றந்தை வீட்டினிற்செல்வஞ்சேரு
முகித்தயாபாரமற்று முடிமன்னர்சேவையுண்டாந்
தொகுத்தநற்கீர்த்திவாழ்வு மாயுளுமுண்டுசொல்லே. உசா

சொல்லியசநிதாணேக்கிற் றேகைமூத்தாளைச்சேர்வ
னல்லலக்கினக்கோணேக்கில் ராஜாக்கள்பிரியனுவன்
மெல்லியபசுக்கோணேக்கில் வெகுசுகவானுமென்க
வெல்லையிற்பாபர்நோக்கி லேதுமில்லாதானென்னே. உஎ

என்னுமிக்கோட்களெல்லா மிலக்கினந்தன்னைநோக்க
மன்னனுற்றனவானுவன் வலியதீக்கோட்கணேக்க
நன்னயமில்லான்றுக்கி நன்மைக்கோண்மூன்றுஞ்சாரி
லன்னவன்சுகசீவியாக வாழ்குவனெனவிளம்பே. உஅ

விளங்கியகேந்திரத்தின் மிக்கலக்கினச்கோண்மேவக்
களங்குறுகோணேக்காமற் சூரணச்சுபக்கோணேக்கில்
விளங்கியவருடமெல்லா மாய்ந்துபோய்ச்சுகவானுகி
யிளங்கிளியனையாய்ராச லட்சுமிகாந்தனுமே. உகூ

இலக்கினபாவம்-முற்றிற்று.

## இரண்டாம் பாவம்.

சுகம்பெறுமிரண்டைநோக்கிச் சொல்வதுகுடும்பம்பொன்னை
முகங்களைக்கண்ணைவாக்கை மொழிந்திடும்வித்தைதன்னை
மகிழ்ந்திடுமசனத்தோடே வகையெலாமாய்ந்துவாட்க
ணுகந்திடுங்கோதாயாரு முணர்ந்திடவுரைக்கலாமே. க

உரைத்திடவொன்றுவாக்குக் குடையகோள்பதினென்றிற்கோ
டிருத்தியமூவர்கூடிற் றிறவியவானுமென்க
வறுத்துபன்னொன்றுவாக்கு வலியலக்கினத்தில்வாழப்
பொருத்தமாய்ராசியுச்சம் பொன்னுளன்புகன்றிடாயே. உ

திட்டமாம்வாக்கைப்பார்த்தோன் கேடிலாவிரண்டிற்கோளுந்
திட்டமாயத்தமைக்கிற்றிரவியந்திசையிற்சேத
நட்டமாங்கோசரததி னடக்குந்துட்டரினாலாகு
மட்டவிழ்குழலினாளே வருபலன்வகுத்துவாயே. ௩

வாறுகேள்சிறிதுதீக்கோட்கள் வாக்கினின்மருவவாக்கோன்
மீறியபெலமாயாட்சி யுச்சங்கண்மேவிநிற்கும்
பேறுடன்மரணமட்டும் பிசகாதுபாக்கியங்கள்
வேறுதீங்கில்லையென்றார் காலத்தைவென்றமேலோர். ௪

வென்றிடுமூன்றிற்கோளு மேன்படிமிரண்டிற்கோளு
மொன்றினிற்சேருமாகி லுடற்பிறந்தாராற்பொன்னு
நன்றிசேர்நாலிற்கோளு நயம்பெருமிரண்டிற்கோளு
நின்றிடலக்கினத்தி னிச்சயந்தாயானேரும். ௫

நேர்பெறுமேழிற்கோளு நிலைபெறுமிரண்டின்கோளுஞ்
சீர்பெறவேழிற்சேரிற் றிரவியமனைவிலாபங்
கோரியவைந்தொன்பானிற் கோட்களுஞ்சுபராய்க்கூடிச்
சாரிலக்கினத்தின்மைந்தன் றந்தையால்வாழ்வுசாற்றே. ௬

சாற்றியவாக்குக்கோடான் றனித்துலக்கினத்திநிற்க
வாற்றியவிலக்கினக்கோ ளனலவனவனுஞ்சேரிற்
றோற்றியபாவமெல்லாஞ் சூரியன்பனியும்போலா
நாற்றிசைகீர்த்திமானாய் நற்பொருளாளிலாமே. ௭

ஆனலக்கினத்திற்கோளு மன்புடையிரண்டிற்கோளுந்
தானமூன்றினிற்போய்நிற்கிற் சகோதரத்தாற்பொன்னாசை
மேனநாலைந்தேழொன்பா னிவைகளிற்சாருமாகி
லூனம்போமன்னைமந்த றொடும்பெண்டாறனத்தானாமே. ௮

பெண்டிருஞ்சுகமுமுண்டாம் பிரியமாய்வாக்கினிற்கோ
ளுண்டானபன்னிரண்டுக் குடையவன்வாக்கிநிற்க
கொண்டாடும்பதினொன்றிற்கோள் குறுகவாறெட்டிலேனும்
விண்டோர்களீராறேனு மெய்ப்பொருணாசமாமே. ௯

மெய்ப்பொருளுடையோனானை வியாழம்பன்னிரண்டின்மேவப்
பெட்புறுவாக்குக்கோடான் பெலவீனமாகிப்போக
நட்புறசுபக்கோள்சென்ம ராசியைநோக்காதாகிற்
கைப்பொருணாசமான தியம்பினர்கலைவல்லோரே. ௰

கலைத்தெரிந்துரைக்கும்வாக்கிற் கருதிலக்கினத்தோனிற்க
நிலைதருவாக்குக்கோட்போய் நிற்பதுபதினொன்றாகி

னலனுறுமிலக்கினத்தை லாபத்தானத்தோனண்ணிற்
குலவிதிநிட்சேபங் குபேரனைப்போலுண்டாமே. கக

குபேரனுமிரண்டோன்பானுங் குறித்தலக்கினத்தின்கோளு
முபாயவைசேசியாங்ச மல்லதுமுச்சவங்கம்
விவேகமாயிவர்கணிற்கின் மொய்ப்பொருள்கோடிதேடித்
தபோதனர்க்கெல்லாமன்ன தானங்களளிக்குந்தானே. கஉ

அளிபெரும்இரண்டோனீச மத்தமனங்களாக
வெளியிலாப்பாவசட்டி யங்கிசமேறுமாகிற்
களிவுறுபறத்தையாலே கைப்பொருளெல்லாந்தோற்கு
முழுவதுங்கடனுக்குள்ளாய் முடிபடுமொழியுங்காலே. கங

காலத்தில்வெள்ளிதிங்கள் கடியவர்க்குடையோன்மூன்றின்
மேலுற்றெங்கேனுநிற்கில் விழிதெரியாதுராவின்
ஞாலத்தின்மறைக்கோனைக்கி னுதிபனருகதாக
நீலக்கண்சிறிதாய்நோக்கு நிலையொளிநெறிநில்லாதே. கச

நில்லாதபாபராசி யங்சநீசக்கோளேறப்
பொல்லாதவியமாறெட்டும் பொருத்தவீராறும்போக
நல்லோர்களுடையனேம ராசியைநோக்கினாலும்
வில்லாருநுதலினளே விழியிவர்க்கிரண்டுபோமே. கரு

போமெனும்பிருகைந்தாறின் புண்ணியர்மூவர்கூட
மேன்மைலக்கினத்திற்சேர வேந்தனல்விழிபோமென்க
பூமனும்வாக்குக்கோளும் பொருந்துலக்கினத்திற்போகக்
காமனைவென்றகண்ணாய் காதினேயுண்டுகாணே. கசு

காணுஞ்சேய்குளிகன்வாக்கோன் காரியின்நான்குகோளு
நீணுறவாக்கினிற்கி னேத்திரரோகவானுஞ்
சோணுறுதீக்கோளாகிச் சிறிதுகோள்சேர்கின்றானு
நாணுறநோக்கினுலு நயனரோகத்தனுமே. கஎ

நாமமாயிரண்டிற்கோட்போய் நல்கிடற்சேரநற்கோண்
மேன்மையங்கிசங்களேவ மிக்குகோனைக்கமேவக்
காமனையழகின்மிக்கக் கண்ணனைக்கணகனைக்கித்
தாமரைத்திருவேகேளாய் தரணியில்வாழ்வன்றானே. கஅ

தானமாமிரண்டுமற்கோள் சார்நலமுகத்தைச்சார்ந்து
வானமென்னிரண்டுநற்கோ ளிருந்திடச்சுவர்க்கமேறிற்
போனகவாக்குநாதன் புண்ணியரிடத்திற்போதின்
மேனகுவாக்குச்சித்தி வித்தையுமிகவுண்டாமே. கக

வித்தைசேரிடத்திற்செவ்வாய் வெய்யவனேக்கிப்பார்க்கிற்
கைத்தலஞ்சுடுவோனெய்யிற் கடியராகுச்சராகச்
சுத்தியதீக்கோணேக்கத் தோன்றியகுழவிதப்பா
தித்திசையபகாரத்தி லிடுவனெய்யிற்கையென்னே. உ௰

என்னுமாறெட்டேழ்ராசு யிவற்றினில்வெய்யோனிற்கத்
துன்னவனல்லாற்செவ்வா யாகிலுமங்கேநிற்கச்
சொன்னதிற்சிறிதுநோக்கத் தோன்றுவன்வசூரியாலும்
பின்னுநோய்த்தீயினலும் பிழைவரும்பேசுங்காலே. உக

பேசியவாக்கிற்றீக்கோ ணின்றிடப்பிச்சர்வாக்கை
மாசுறுதீக்கோணேக்கின் மைந்தர்க்குப்பருத்தபல்லுந்
தூசொடுதுன்முகங்க டோறும்வாக்குடையோனேடே
காசுருகுளிகன்கூடிற் கபடனுமுகத்திற்காணே. உஉ

காண்பவரிரண்டிற்கோட்போய்க் கனிந்துகேந்திரங்களேறி
லாண்புகழ்கின்றவாக்கு மழகியமுகமுமாவ
னூண்பெறுவாக்குநாத னுச்சாட்சிவர்க்கமோடிச்
சேண்பெறநின்றகண்ணுஞ் செழுமதிமுகமாய்ச்செப்பே. உ௩

செப்பியராகுவோடோர் சிறந்தவாக்குடையோன்சேர்ந்து
தப்பிலாதீராறெட்டிற் றூனமாறினிற்சார்ந்தாலு
மொப்பிலாவிராகுநின்ற வோரைகளேழுகோளுங்
கொப்புடனிருக்கினேக்கிற் குதலைசேர்நாவுதாமே. உச

நாவினிற்கொடியதான ராகுமூன்றிரண்டுகோளு
மூவருங்கூடிநின்றான் மூடமயிருண்டாமென்க
தாவியவாக்கில்வெய்யோன் சனியனின்றிடத்தரித்ரன்
மேவியசனிசேய்நிற்கில் வெகுரோகவானுமின்னே. உரு

மின்னியவாக்குநாதன் வியாழத்தினுடனேகூடி
முன்னிலாறெட்டீராறின் மொய்யமூக்கறையனுவன்
மன்னியவாக்கில்ரெண்டு வலியாட்சியுச்சமாகி
லன்னமேதேசத்துக்கோ ராலயவானுவானே. உசு

ஆனதோர்புதன்வியாழ மடுத்தவாக்குடையோன்மூவர்
தானமாறெட்டீராறிற் சார்ந்திடவித்தைசாரான்
மேனகுமூன்றுகோளு மிக்ககேந்திரத்திரிகோணம்
போனதால்வாக்கில்வித்தை பொருந்துவன்பூவையன்னய். உ௭

பூவையேபுதன்போய்வாக்கிற் பொருந்திடப்பெலவீனத்தாற்
றூவியமல்லுகட்டு சண்டைபாற்சாவுண்டாகுந்

தேவர்கள்குருவும்வாக்குச் செல்வனும்பெலன்சேராரேன்
மேவியமவுனரோகி யாமெனவிளம்பலாமே. ௨௮

விளம்புமான்மறையோனங்க மேறமேலுச்சராகி
வளங்கெழுசுபக்கோணெக்க வல்லதுபராவதாம்ச
முளங்கெழுமாலுத்தானங் கூட்டத்தாயாதியாவன்
களங்கில்சொல்வழக்குந்தீர்க்குங் கண்ணனுங்கருதுங்காலே. ௨௯

கருதியவாக்கின்மாலுங் கனகன்கெந்திரத்திரிகோணம்
பிருகதியுச்சமாகப் பிரந்தவன்வித்துவானாய்ப்
பருதியவாறுசாத்ரம் பாடவும்படிக்கவானோன்
பொருளுடைக்கெணிதமென்னும் புலவனாய்மேவுவானே. ௩௰

மேவியபுதனுல்நோக்க மேதைகெந்திரத்திலாகப்
பாவியர்நோக்காதாகிற் பலகலைபடிக்கவல்லான்
ஞவியபிருகுபொன்னன் றக்கநாலிடத்தைச்சார
வோவியமனையமாதே யுலகிலொப்பில்லனாமே. ௩௧

ஒப்பிலாக்கதிர்சேய்வாக்குக் குடையகோளிவர்கடன்னைச்
செப்பமாய்மறையோன்வெள்ளி தீங்கறநோக்கச்செல்வர்
தப்பில்பாராவதாம்சஞ் சார்ந்திடத்தக்கசாத்ர
மெய்ப்பினுற்படிக்கவல்ல வித்துவானவன்மின்னே. ௩௨

மின்னுநான்மறையோன்வீச்கோன் வெகுபெலமாகமேவச்
சொன்னகோடன்னைவெள்ளி சூரியன்றுடர்ந்துநோக்கப்
பன்னியதர்க்கசாத்திரம் படிக்கவும்பாடவல்ல
னின்னவன்புகழுக்கொப்பா யிசையவேறில்லையென்னே. ௩௩

இசைந்தகெந்திரத்திரிகோண மிவைகளின்மழைக்கோளேக
வசைந்தமால்பிருகைநோக்க வன்னவனிவனைநோக்கத்
துசங்கெளுஞ்சநியும்பாரா வங்கிசந்தோன்றுமாகி
னிசம்பெறுமவேதாந்தத்தி னிலையெலாந்தெளிவனேரே. ௩௪

நேர்பெறுமேழிற்கோளு நிலையிலாவெள்ளியோடே
சீர்பெறுவாக்குநாதன் செப்பியமுககோடன்னைச்
சார்விலாப்பாவர்நோக்கச் சார்ந்திடவலதேற்றுனே
யோர்பனிரண்டாறெட்டி லுயர்மனையாள்சாவுண்டே. ௩௫

உண்டுசொல்வாக்குக்கோளு முண்மையாவேழிற்கோளுந்
தண்டியேயதிபிலன்கள் சார்ந்திடவலதேற்றுனே
கொண்டதீயுச்சமாகக் குலவியேநிற்குமாகிற்
கண்டசாதகனுக்கேக களத்திரமென்னலாமே. ௩௬

களங்குறுமதியும்வாக்குக் கதிபனும்பிருகுதானும்
விளங்குகெந்திரங்களேறில் வெள்ளிபாத்திரத்திற்றின்பன்
முழங்கியவாக்கோன்வேதன் முழுமதிபிருகுநான்கும்
வழங்கியெங்கேனுங்கூடின் மைந்தன்வெண்கலத்துண்பானே. ௩எ

ஆனலக்கினத்தோன்வாக்கோ னுகவீரிரண்டுபெரு
மீனவெஞ்சனியைச்சேரிலிரும்புபாத்திரத்திலுண்பன்
சேனைசேய்வாக்கினிற்கச் சேய்தனைப்பாவர்நோக்கின்
மானைநேர்விழியினளே மதலைசட்டியிலுண்பானே. ௩அ

பானலசிறந்தவாக்கோன் பாவர்களுடனேகூடி
வேனராவாக்கினின்னட் பாட்சியுமுச்சமேனு
மானவன்சிரிப்புமிஞ்சு மன்னவனீசமேறி
லீனனுமாகிப்பிச்சை யெடுப்பனென்றியம்பலாமே. ௩௯

இயம்பியவாக்கோனற்கோ ளெய்திடவெண்டின்கோட்போய்
நயம்பெறுகோளேச்சேர நன்மைக்கோணேக்குமாகிற்
பயம்பெறுசுகத்தோடுண்பன் பகைநீசராசியேறி
மயங்கியநீசர்நோக்கில் வதிந்துண்பன்பலவீடெல்லாம். ௪0

எல்லையாமிரண்டினிற்கோ ளியம்பியநற்கோளாகச்
சொல்லியவுச்சராசி தோன்றிடச்சுபர்கணேக்கி
னல்லபோசனங்களாக நாவினுற்சிறுகவுண்பன்
வில்லெனுநுதலாய்கேளாய் மேலோர்களுரைத்தநூலே. ௪௧

மேலெழுவாக்குத்தானம் வீட்டுக்கோள்சனியதாகப்
பாலகன்வாக்குக்கோள்போய்ப் பகைசனியொன்றுனுலுங்
கோலியநீசராகி குறுகிடவல்லோர்கோதாய்
சாலவுஞ்சனிபார்த்தாலுஞ சவுண்டிசாதங்களுண்பான். ௪௨

சாற்றியமறையோன்சிங்கா சனமெனுமங்கமேற
வேற்றியபுகருங்கோபு ராங்கிசமேறிநிற்க
வாற்றியவாக்குநாத னயிராபதாங்சமேறிற்
பார்த்திபன்வெகுசேனைக்கும்படிபோட்டிரட்சிப்பானே. ௪௩

படியிலோர்லக்கினக்கோள் பாலகன்வாக்குக்கோளைக்
கொடிதலானேக்கமற்றக் கொடியதீக்கோளுநோக்கி
லடிசிலுமேதானுனு மறவுமற்சிதங்கள்பண்ணுன்
கடியதாய்ப்பசிக்குமுன்னே கண்ணிலெய்தியதுண்பானே. ௪௪

சூரியற்கெட்டிலுள்ளோன் றேன்றிடுமோசையன்னுன்
காருமங்கிசத்திற்றீயர் சனிவருங்காலந்தன்னில்

வீரியமன்னனேடு மேவுங்கோடிசைகளுணி
லாருயிரிறப்பன்றந்தை மற்றகாரகர்க்குமாமே. சரு

இரண்டாம்பாவம்-முற்றிற்று.

---

## மூன்றும்பாவம்.

காரிகச்சேயுமூன்ருேன் மூன்றினினிற்கப்பெற்ருேன்
பாரவங்கிசமாயோரைப் பாராடுமுதலாயெண்ணிச்
சார்பகைநீசராகி தள்ளிமெ்சதிராய்ப்பார்த்தே
யூர்துகையாகவிம்மாத் திரஞ்சகோதரமுண்டென்னே. க

உண்மையாமூன்றைநோக்கி யுரைப்பதுசகோதரங்க
டண்மையிற்பராக்ரமங்கள் சாசசந்தைரியங்கள்
பெண்கண்மார்போர்கம்வீரியம் பெறுகுமாபரணப்பேறு
திண்மையாங்குரலினேசை செப்பலாந்தெளிந்ததானே. உ

தெளிந்துசொன்மூன்றேழொன்பான் சிறந்தபன்னென்றிற்செல்வர்
வளைந்துசின்ஞன்குகோளு மபகாரத்திசையிலாதல்
வழங்கியகோளைநோக்கி வருவதையாண்பெண்ணென்று
முளங்கொளுஞ்சகோதரங்க ளுண்மையாயுரைக்கலாமே. ௩

உரைத்தனர்மூன்றின்கோள்போ யுயர்திரிகோணஞ்சார்ந்து
நிரைப்பிலமாகமூன்றி னின்றகோள்பிலத்துநிற்கத்
துரைத்தனரிரண்டுகோளுஞ் சுற்றியதிசையிற்ருென்றிக்
குரைத்தெழுஞ்சகோதரங்கள் கோட்பிலமறிந்துகூறே. ௪

கூறுங்காற்செவ்வாயானேன் கொடும்பிலமாகப்பார்க்கிற்
றேறுங்காற்சகோதரங்க டீர்க்காயுதானுமென்க
மீறுங்காலிலக்கினத்தில் வெகுபிலமாய்ச்சேய்மேவிற்
பேறுங்காற்குழவிமிக்கப் பிறவுமாமென்றுபேசே. ரு

பேசினமூன்றுடையோன்சேயும் பிசகிலாறெட்டீராரே
ஞசமாஞ்சகோதரங்க ணலனிலாப்பாபர்சாரில்
வீசினுந்தீக்கோளோடே மேவினும்வெறும்வீடாகத்
தாசனேசகோதரங்கள் சருவமுநாசந்தானே. சா

தாங்கொளுஞ்செவ்வாய்நீசந் தாவவத்தமனஞ்சாயப்
பாங்கினினீசர்சேரப் பதிந்திடநீசராங்சஞ்
சாங்கமாய்ப்பாவசட்டி யங்கிசஞ்செய்கின்றுலு
மாங்கிவன்சகோதரங்க ளடங்கலுநாசமாமே. எ

ஆமெனச்செவ்வாயேனு மந்தமூன்றுடையோனேனுந்
தீமைக்கோளுடனேகூடச் சேர்ந்தவர்நின்றவீட்டோ
னுமமுப்பாபராகி னல்லவாலிபங்கடன்னிற்
றீமையாஞ்சகோதரங்கள் சேறுமென்றுலகிற்செப்பே. அ

செப்பியவாக்குநாதன் செல்லவாறெட்டீராறி
னற்பிலனுகச்செவ்வாய் நலமிலாக்கோளைநண்ணப்
பொற்புறுமதிபோயந்தக் கோளொடும்பறுந்துமாகி
லிப்படியிறந்தசேய்க்கிங் கிரண்டுதாயுண்டென்பாரே. கூ

இரண்டினிற்கடுத்தமூன்றி லிருப்பதுநற்கோளாகிற்
றிரண்டெழுஞ்சகோதரங்க டீர்காயுளென்றுசெப்பு
வரன்றியமூன்றிற்பாபர் வந்திடவலியதீக்கோள்
பிரண்டெழநோக்குமாகிற் பெண்சகோதரங்கள்பொன்னே. க0

பொன்னனுய்ப்பருதிமூன்றுய்ப் பொலிவிலாத்தீக்கோணேக்கிற்
றன்னின்மூத்தோர்கள்சாவாஞ் சநிசெவ்வாய்மூன்றிற்சாரின்
மின்னியதீக்கோணேக்கில் வேந்தனுக்கிளையதேசர்
மன்னமேதப்பாதென்றூர் கணிதநூலாய்ந்தவல்லோர். கக

ஆய்ந்தமூன்றுடையோனின்ற வரியகெந்திரத்ரிகோணஞ்
சாந்ததிற்பாவராகிற் சகோதரநாசந்தானு
மேய்ந்தகெந்திரத்ரிகோண மிவைகளிற்சுபர்களேகிற்
றோய்ந்தவர்சுகமாம்பாபர் சுகருமேற்சமனுய்ச்சொல்லே. கஉ

சொல்லியமதியாறெட்டிற் றோன்றமுன்னுன்கிற்றோய
வெல்லுமூன்றுடையோன்கூடில் வேறுதாய்முல்லையையுண்ணு
மல்லநாளினிற்கோண்மூன்றே னுன்கினினண்ணுமாகி
லில்லையின்சகோதரங்க ளிவனைமிக்காருமென்னே. கங

மிக்கமூன்றுடையோன்சேவு மேவிடவேற்றோர்தம்மை
யுட்கலந்தொருதாய்பெற்ற துடன்பிறப்பாகிக்கொள்வன்
றக்கமூன்றுமிடங்க டன்னிலேசநிபோய்ச்சாரி
லிக்கணந்தனக்குநேரே யிளையதைச்சாவுண்டென்னே. கச

இளைத்திடாமுன்றின்கோட்போ யெய்திடப்புருடராசி
வளைத்துநோக்கானேற்பின்பு வருஞ்சகோதரங்களாணு
முளைப்பதுந்திரியாயிந்து முதுபுகர்சாரிநேக்கிற்
றழைத்தசாதகர்க்குப்பின்பு சகோதரம்பெண்ணுய்ச்சாற்றே. கரு

சாற்றியமூன்றின்கோட்போய்ச் சார்ந்திடச்சுபர்களோடே
யேற்றியசுமக்கோணேக்கி யிருக்ககேந்திரத்திரிகோணங்

தோற்றியசகோதரங்கள் சோர்விலாதாண்பெண் ணுண்டாங்
கீர்த்திமாளுகிமிக்கக் கிளையொடுசுகமுண்டென்னே. கசு

சுகமுடன்மூன்றினிற்கோள் சுபருடன்பாபராகி
லகமகிழ்ந்திலக்கினக்கோ ளவருடன்கூடிநிற்கிற்
றகமையாந்தாய்க்குக்கெர்ப்பந் தங்கியல்லாதுதாழ்வாம்
புகலுங்கான்மேலோரெல்லாம் பொறுத்துநூல்வழியிதாமே. கஎ

பொறித்தபன்னென்றிற்கோட்கள் போன்றதத்தனைமுன்னோராஞ்
சிறந்தவற்குடனேமூன்றிற் சிறந்ததெத்தனைக்கோளுண்டோ
பிறந்ததையெண்ணிக்கொண்டு பின்னோர்களிகையைப்பேச
வறிந்துமேலோர்கள்சொல்லு மடவிதுசகோதரற்கே. கஅ

அடவுடன்மூன்றோன்செவ்வா யவ்விடத்திருந்தோன்பார்த்தோன்
றிடமுடன்பிலவானுகச் சிறந்திடநாலுபேரு
முடனுறுங்கோளுமெண்ணி யுடன்பிறந்தாரைச்சொல்வாய்
நடமிடுநீசவத்த மனங்கண்டுநாசஞ்சொல்வாய். கசு

நாசமிற்சகோதரத்தி னுதிபன்முதலாய்முக்கோள்
வீசியபிலன்களாக மிக்கிரண்டேனுமாகத்
தேசிகன்சகோதரத்திற் சிறிதுபோம்சிறிதுநன்றும்
பேசிலுச்சாட்சிமற்றும் பிலன்கண்டுபிறப்பைப்பேசே. உ0.

பிறந்தமூன்றின்சேய்நிற்கப் பிரிந்துவங்கிசத்தைநோக்கிச்
சிறந்தமேடந்தொட்டங்சஞ் சேர்ந்தராசிகண்மட்டெண்ணி
மறைந்தசத்துருபீசங்கள் வரைந்ததின்மற்றராசி
யுறுந்தகையெண்ணிக்கொண்டே யுடன்பிறந்தாருண்டென்னே. உக

உடன்பிறந்தாரிலாண்பெண் ணுரைத்திடமூன்றோன்செவ்வாய்
மடந்தைராசியிலேநிற்க மங்கையாங்கிரகநோக்கத
திடம்படச்சேருங்கோளுந் தெரிவைகோளாகச்சேரிற்
றடங்கணுயெண்ணியாண்பெண் டன்னையித்துகையாற்சாற்றே. உஉ

சாற்றியமூன்றும்ராசி தான்திரராசியாகிற்
பார்த்ததுமூன்றைநோக்கிப் பதியதுந்திரிகோளாகிற்
றீர்க்கமாய்ச்சகோதரங்கட் டிரிவருஞ்சிறுவன்மன்னுங்
கூற்றழல்விழியினுளே குறிப்பிவையறிந்துகூறே. உ௩

கூறின்மூன்றினிற்கோடன்னைக் குறித்தவச்சகோதரற்கு
மாறியதிரிகளாலே வரும்பலனுரைக்கமற்று
மீறிலக்கினத்தோன்செவ்வாய் மிக்கமூன்றுடையோனாலே
தேறியசகோதரர்க்குச் சேய்பலனரிட்டஞ்செப்பே. உச

செப்புங்காலிலக்கினத்தோன் றெளிந்துமூன் றுடையோன்கூடித்
தப்பிலாதுறவுமானாற் சகோதரர்க்கினியனாவ
னப்படிகூடிமூன்றி லிலக்கினந் தன்னிலேகி
லொப்பிலாப்பகைஞராகி லுயர்தருவிரோதனாமே. உரு

உயரிலக்கினத்தின்கோளு முற்றமூன் றுடையகோளும்
பயில்பிலவீனமாகப் பகைத்தசத்துருவேயன்றித்
தயிரியரெட்டுதன்னிற் றயங்குபன்னிரண்டிற்சார்ந்து
செயலின்றேற்சகோதரற்குத் திசையிலேவாசஞ்செப்பே. உசு

செப்பமாம்லக்கினக்கோள் சிறநதமூன் றுடையோன்செவ்வா
யொப்பிலாமூன் றுபேகு முருகன்றதத்தைநோக்கித்
தப்பிலாதிபனைச்சார்ந்த சகோதரர்சிநேகந்தானும்
வெப்பமாயிவராற்சாருங் கலகமும்விளம்பலாமே. உஎ

விளங்கியமறையோன்வெள்ளி மிக்கமூன்றதனைநோக்கின்
முழங்கியசகோதரத்தை முழுதும்ரட்சிப்பானல்லால்
வழங்கியகருதிமாலு மைந்தன்மூன்றதனைநோக்க
வுளங்கொளுஞ்சகோதரங்க ளுசமென்றுரைக்கலாமே. உஅ

உரைத்திடின்மூன்றிநின்றோ னுற்றமூன் றுடையோன்செவ்வாய்க்
கிறைப்பகைநீசஞ்சார்ந்து நிற்கவரெட்டாறிற்
றிசைதிசையபகாரத்திற் றிரவியநாசமாகும்
வரைபிலமாகமண்ணிற் சகோதரவரவாமாதே. உகூ

வாமமூன் றுடையோனுச்ச மாகியேபாவக்கோளை
யாமெனக்கூடியாரெட் டீராறிலமையுமாகிற்
றாமரைக்கண்ணுய்ராசி சரங்களாய்ச்சராங்சமேறிற்
றீமையில்லாதயுத்த களங்களிற்செயங்கொள்வானே- ௩0

செயனுடைச்செவ்வாயானோன் செயிற்பிலவீனமாக
வியனிலாப்பாவசட்டி யங்கிசமேறுமாகிற்
பயறுங்காற்சுபர்கள்கூடப் பார்க்கப்பாக்கியவானாகித்
தயிரியவானுயுத்த சண்டையிற்செயிப்பன்றானே. ௩க

தானமாமூன்றோன்வெய்யோன் றன்னுடன்கூடுமாகின்
மேன்மையாங்கன்யவானு மெண்ணிலாவுடனேகூடிற்
றீனமிறைரியவானுஞ் சேயொடுசேர்ந்துநின்றாற்
பூனவிற்றுட்டனவன் புதன்சாரிற்புத்திமானே. ௩உ

மாதிசைமூன்றின்கோட்போய் வலியராகுவினைநோக்கிற்
றீதெனும்பயத்தனவன் செய்யகேதுவினைச்சேரிற்

கோதிலாவியாதியத்தன் குளிகனைச்சேருமாகி
லோதியகேதுவோடே யுடனின்றபலனுக்கொப்பே. ௩௩

ஒப்பிலாமூன்றின்கோட்போ யுமர்மறையோனைச்சார்ந்து
மெய்ப்பிலக்கினமேகாற்கான் மிருகத்தாற்பயமுண்டென்க
விப்படியிவர்கள்கூடி யிவர்சிலராசியேறிற்
றப்பிதமன்றிச்சொன்னேஞ் சலத்தினாற்பயமுண்டென்னே. ௩௪

சலந்தருகிரகச்செவ்வாய் சார்ந்திடுகிரகத்தோடே
பிலம்பெறநிற்கிலாக்கை பிலனும்மாமிசையும்பேசு
மிலங்கியேசெவ்வாய்மூன்று மிடத்தின்கோளிருந்தோன்மூன்றுங்
கலங்கிடாப்பிலமேயுத்த களத்தினிற்சூரன்காணே. ௩௫

காண்கிவிம்மூன்றுகோளின் கனிதிசையபகாரத்தி
னூண்பழங்கிழங்கதா து முறைத்ததிற்பிலன்றிரண்டேற்
பூண்மூலமடவாய்நல்ல பூடணம்பொருள்வந்தெய்துஞ்
சாண்பெறுமூத்தத்தாயார் சகோதரந்தானுமாமே. ௩௬

தானமாமூன்றோனல்ல சார்பொடுபிலவானுகி
னூனமிற்சாதுவாவா னெப்பிலாமூன்றின்கோட்போய்
மானனாய்நீசவத்த மனப்பகைராசியேறி
லீனபாபர்களைச்சேரி லிவனுஞ்சாதகஞ்செய்வானே. ௩௭

இவனிலக்கினத்தின்முன்னோ னிராகுவினுடனேகூடி
லவனியிலந்தராசிக் கதிபனுங்கூடிக்கூடிப்
புவனிலக்கினத்தோனின்றாற் பூவையேகேட்குங்காலை
தவநெறியில்லாச்சர்ப்பப் பயமெனச்சாற்றலாமே. ௩௮

சாற்றியமூன்றின்கோட்போய்ச் சார்ந்திடப்பாபர்தீயோர்
தோற்றியராகுவோடே தோய்திடப்பாபர்நோக்கில்
வேற்றுமையில்லைசொன்னேம் வியகண்டந்தன்னிற்றானே
மூத்தபாபிகளேயாகின் முடமயிருண்டாமென்பார். ௩௯

முடங்கியமூன்றிற்பாவர் மொய்த்திடக்குளிகன்கூடிற்
றடங்கணாயிவர்க்குக்கண்டந் தனின்முடமயிருண்டாகுந்
திடம்படச்சனியுஞ்சேயுஞ் செப்பியமூன்றிற்சேரிற்
றுணங்கியேகண்டரோகஞ் சொல்லலாமிவர்க்குத்தோதாய். ௪௰

தோகையேமூன்றின்கோட்போய்ச் சுரர்குருவுடனேகூடப்
பாகைலக்கினத்தோனின்றாற் பசுக்களாற்பயமுண்டென்க
வேகியேமூன்றின்கோட்போ யிராகுவினுடனேகூடி
லாகையால்விடத்தினாலே யவமிருத்தென்னலாமே. ௪௧

அவனியின்மூன்றோன்புந்தி யன்னவனுடனேகூடிற்
கவனமாய்த்திரிகளோடே கலந்துசும்பனங்கள்செய்வ
னிவனுடன்பகைநீசக்கோ ளெய்திடப்பாபர்கூடிற்
புவனியில்விடத்தையெல்லாம் புசிப்பனென்றியம்பலாமே. சஉ

புசிப்பிலாமூன்றின்வேந்தன் புந்தியுமிருக்கவல்லால்
விசையினுலிவர்கணோக்க வெகுபிலவான்களாக
வசையின்மூன்றினுக்குக்கெந்திர மறையவன்மாலுமாகிற்
கவியினுலினியநாவாற் கண்டத்திலிசையுண்டாமே. சங

கண்டத்தின்மூன்றின்மீதே காதலார்சுபர்கள்வாழ
விண்டதைச்சுபர்கணோக்க மிக்கமூன்றுடையோன்றானும்
பண்டையிற்சுபர்களோடே பாய்ந்திடிற்பணிகள்காதிற்
கெண்டையங்கண்ணுபென்றுங் கிடக்குமென்றியம்பக்கேளே. சச

கிடக்குமப்பணியைச்சொல்லக் கிட்டியமூன்றுதன்னிற்
றிடப்படவெள்ளிநின்றாற் சேர்பணிமுத்தினுலாந்
துடக்கியமறையோனிற்கிற் றுளசிதாமரையினுலே
புடைத்தெழுகதிரோனின்றாற் புனைவதுசிவப்புநீலம். சரு

புனைமதிமூன்றினின்றாற் பூணுநாணுவிதங்க
ளினியதார்புதன்மூன்றுகி லிம்மூன்றுஞ்சேய்வீடாகிற்
கனபணிவிசித்திரங்கள் காரணமூன்றோனுச்சி
யனகனுமுச்சமாகி லளவினற்பணி களாமே. சசா

ஆமென்பர்மூன்றோன்பத்தா யதுசுபராசியாகின்
மேன்மைவக்கிரங்கன்சேரும் வெள்ளியுமிவனுங்கூடிற்
றூமங்கள்பணிகளாடை தன்மகாதையனுஞ்சேர்வன்
பூமங்கார்புதன்போய்நோக்கிற் புகழிப்பான்புண்ணியத்தை. சஎ

புகழித்தமூன்றின்கோட்போய்ப் புண்ணியருடனேகூடித்
தகமித்தபசுக்கோணேக்கிற் றைரியவானுமென்க
சுகமித்தபாபரோடே தோய்ந்திடப்பாவர்நோக்கின்
மகவுக்குத்தாயரில்லை வாணுதலாளேசொல்லே. சஅ

வாணுதலாளேமுன்பு வகுத்துரைக்கின்றகோட்கள்
பூணுகெந்திரத்திரிகோணம் பொருந்திடசுபர்கணோக்கி
னீணிலத்துதித்தமைந்த னிலமையாயெந்தநாளுங்
கோணிலாத்தைரியவானுங் கோதையேயறிந்துகூறே. சகூ

கோதையேமூன்றின்கோட்போய்க் கொடியசேயுடனேகூடித்
தீதெனும்பாபராசி சேர்ந்திடப்பாபர்சேரிற்

சேதமாய்வீரியநட்டந் திரிகோணகெந்திரஞ்சேர்ந்து
சூதிலாச்சுபர்கள்கூடிற் சுத்தரேநோக்கவீரியன் ௫0

சுத்தமாய்வெள்ளியிந்து மன்றியேசுருதிமூன்றை
வெற்றிசேர்சுபர்கணோக்க மென்சுபராசியங்க
மத்திலேபிறக்கின்மாதே யதிசுகபோசனங்க
ளுற்றிவன்புசிப்பனென்றே யுரைத்தனர்தெளிந்தமேலோர். ௫௧

உரைத்திடின்மறையோனின்ற நவாங்கிசத்திரேகணத்தில்
விரைத்தமூன்றுடையோனிற்க வேதியனவனைப்பார்க்க
வரைத்தகெந்திரத்திரிகோண மவைகளிற்செவ்வாய்நிற்கி
லிரைத்திடாப்பழங்கிழங்கி லிச்சையாயிருப்பனென்னே. ௫௨

இச்சையாய்மூன்றோனோடே யிரணியன்பிருகுகூடப்
பச்சைமானோக்கிப்பார்க்க வல்லதுபதியிற்கூடிற்
கச்சணிமுலையாய்கேளாய் காசினிதனிலேமிக்காய்
நிச்சயமன்னதான நிலவரமாய்ச்செய்வானே. ௫௩

நிலவரமாகமூன்றோ னின்றிடச்சுபக்கோளோடே
மலைவிலாச்சுபர்கணோக்கி வையதேசியங்கமேற
நலனுறச்சுகத்தோனேனு நாரியேகேட்குங்காலை
யுலகினிற்பிறந்தசேய்க்கே யுரைத்திடுங்குணங்கடானே. ௫௪

மூன்றாம்பாவ - முற்றிற்று.

—*—

# நான்காம்பாவம்

உரைக்கலாநான்கைநோக்கி யுடம்பினிற்சுகங்கள்வித்தை
குரைத்தெழுவாகனங்கள் குணமனம்பூமிவீடு
மரைத்திடும்பரிமளங்க ளடிமையாண்மாடுகன்று
நிரைத்தெழுபெந்துதாயார் நெறியிவைநிகழ்த்தலாமே. ௧

நிகழ்த்தியனான்கினோன்கோ னின்றிடச்சுபருங்கூட
மகத்துவைச்சுபர்கணோக்க மாபிலவானேல்வித்தை
பகுத்திடுநான்கோனோட் டீராறிற்பதியப்பாபர்
மிகுத்ததிற்கூடநோக்க வீடுமேல்வித்தைதீதே. ௨

வித்தகனான்கினோடே வியாழமும்புதனுங்கூடப்
பத்தியாயெட்டீராறிற் பகைநீசராசியாகிற்
புத்திவித்தைகள்விவேகம் போய்விடுமிவர்கண்மூன்று
நத்தியவுச்சவாட்சி நற்கோணகெந்திரங்கணன்றே. ௩

நன்றென்பர்பிலவானாகை நவையிலாவெள்ளிநிற்க
வின்றெனிற்பிலவானாகை வீண்மதியிருக்கவித்தை

பொன்றிடச்சுபர்கணேக்க வல்லதுபுகழ்க்கோள்வீடாய்
மன்றல்சேர்நான்குநன்றேன் மாதாவுக்காயுளுண்டே. ச

மாதாவினுலின்கோட்போல் மருவவாறெட்டீராறிற்
போதாதலக்கினங்கள் பொருந்துலக்கினத்தின்மீது
தீதானபாபர்சேரத் தீயவர்நோக்கிப்பார்க்கின
மீதானமாதூர்நாச மாமெனவிளம்பலாமே. ரு

விளங்கியேயமரபட்ச மேவியசந்திரனுக
வழுங்குமாறெட்டீராறில் வலியபாவர்களேகூடிப்
களங்கமின்நான்கிற்பாபர் கலந்திடப்பிறந்தசேய்க்குக்
குளம்பெறுதமர்சாமென்றங் குரைத்தனர்தெளிந்தமேலோர். சு

மேலவருரைத்தநான்கில் வேசித்தசனிபோய்நிற்க
நீலனைப்பாபர்பார்க்க நீதியட்டமராசிக்கோள்
கோலியேபகைநீசங்கள் கொண்டுநின்றிடுமேயாகிற்
பாலகன்றனக்குத்தாய்சா மென்றனர்பகருங்காலே. எ

பகர்ந்திடின்மூன்றிலேந்திற் பாபர்களிருக்கநான்கோ
னிகழ்ந்திடும்பகைநீசத்தி லிருந்திடவிந்துவானேன்
சுகம்பெறுப்பாபரோடே தோய்ந்திடப்பிறந்தசேய்க்கு
மகன்பெறுதாய்க்குரோகம் வருமெனவகுப்பர்மாதோ. அ

வகுத்தவாறுடையோனுன்கோன் மன்னியொன்பதிலேநிற்கச்
சுகத்துடன்பிறரைநாடித் தோயவன்னியரைத்தாயார்
நிகழ்த்தியநாலின்கோனு நிகழ்த்துமொன்பானிற்கோனு
மகத்துவனுலினின்றுன் மருவுமன்னியரைத்தாயே. கூ

அன்னியமதிதீயோரை யணுகிடப்பாபர்நோக்க
மின்னிடுகதிரினேடே மேவிதெந்திரமாய்நாலு
முன்னியநான்கிற்பாப ருறைந்திடப்பாபர்நோக்கிற்
றென்னவன்றூயைப்போன்ற திரிகளைச்சேருவானே. ய

சேருங்கான்மதியினுலுஞ் செய்யசுக்கிரனுனலு
நேருங்கெந்திரத்தினிற்க நின்றதைப்பாபர்நோக்கச்
சாருங்கானன்கிற்பாபர் சார்ந்திடத்தாயையேனுங்
கோருந்தன்குருத்திரியேனுங் கூடுவான்குணங்கொண்மாதே. யக

குணங்களாறிடத்தின்கோட்போய்க் குளிர்ந்தசந்திரர்சேயோடே
யிணங்கியொன்றினிலேநிற்க வின்றெனிற்கொடியராகு
வணங்கனுக்கதிரோனேடே யாயினுமருவுமாகி
னிணங்களாயிவனைப்பெற்ற நேரிழைபாத்தையென்னே. யஉ

என்னுமோர்மதிபோய்ராகு வேற்றகேதுவனைச்சேரிற்
பின்னையோர்நீசரங்கம் பெருகியசநியேசூத்ரன்
பொன்னனாய்புதனாதித்தன் பூணுநூன்மறையோனேடேற்
சொன்னதில்சத்திரியன்வைசியன் சோதிடன்பார்ப்பான்சொல்லே.

சொல்லின்மூன்றுடையோன்சந்திரன் றேயுமாறெட்டீராறில்
வில்லெனுநுதலாய்கேளாய் வேறொருமூலைப்பாலுண்ப
னல்லநான்குடையோனைந்தோ னண்ணவாறெட்டீராறே
லெல்லைலக்கினக்கோண்மிக்கே லிவரிடத்தந்தைசாவே. ௰௪

இவனுடன்பத்தைந்தாங்கோ ளிருவருமொன்றாய்க்கூடி
மவுனமாறெட்டீராறாய் மற்றலக்கினத்தின்கோளுந்
தவறிடாப்பிலமதானாற் றாய்க்குச்சீமந்தமாமுன்
புவனமேற்றந்தைசாவாய்ப் புகலலாம்பூவின்மாதே. ௰௫

பூவினன்குடையகோளும் புதனிலக்கினத்தின்கோளுந்
தாவியந்தந்தகெந்திரத் திற்றிரிகோணஞ்சாரி
லேவியகெந்திரராசிக் கினியலக்கினத்திலேக
வோவியமனையதாயாருடன்கட்டையேறுவானே. ௧௬

யுடன்பெறுநாலின்கோளு முற்றலக்கினத்தின்கோளுந்
திடம்படுவைந்தின்கோளுஞ் சேர்க்கெந்திரத்திரிகோண
மடங்கலாநதிசையிலேனு மவகாரந்தன்னிலேனுந்
தடங்கணாயிவனைப்பெற்ற தாயார்க்குமரணந்தானே. ௧௭

தாக்கியகதிர்வெண்டிங்கள் சார்ந்திடவைந்தினொன்றுந்
தீக்கெழுமரணந்தானுஞ் செய்யநான்குடையோனன்காய்
நோக்கியேயெழுமாதித்த னுடையசம்பந்தமாகிற்
பாக்கியமுடையதாய்க்குப் பலனனுமரணந்தானே. ௧௮

பலன்களையுரைக்கத்தாய்க்குப் பகருநான்குடையோன்றிங்க
ணலன்றிசையபகாரங்க ளான்கினின்றேன்பார்த்தோன்
பிலன்றிசைபபகாரத்திற பெற்றதாய்மரணத்தாலே
மலக்குவனிவன்றன்றந்தை மறைவலோர்சொன்னவாறே. ௧௯

வறையவன்கோபுராங்க மாகவல்லதுநான்காக
விறையவனிரண்டுபன்னொன் றேகினுஞ்சுகவானென்க
துறையின்மானன்கோமேறக்கச் சுபர்கண்மத்தியிலேதோன்றத்
தறையின்மான்மறையோனங்கச் சாரினுந்தவஞ்செய்வானே. ௨௦

சாருங்கானன்கினிற்கோன் சார்ந்திடப்பிலவானாக
ஆருங்காலக்கினத்தி லுற்றசம்பந்தமாக

நேருங்காற்பலன்கடன்னை நிலவரமாகச்சொல்லில்
வாருங்காற்குழவிபெந்து வகையிலேசுகமுண்டாமே. உக

வகையினன்கோன்சந்திரன் மாபிலனுகவாழத்
தகையினிற்சாதரர்க்குச் சரீரந்தான்சுகமதாகும்
பகையொடுரீசவத்த மனங்களிற்தபயுமாகிற்
றுகையினிலிவன்சரீரஞ் சுகமில்லையென்றுசொல்லே. உஉ

சுகம்பெறுவெள்ளிபொன்பான் றன்னெடுதேய்ந்துநான்கின்
மிகப்பெறுபிலவானுகில் வெகுகாலம்போகமேவும்
பகர்ந்திடலட்டமத்தோன் பதிரண்டிற்சுபரோடேகிற்
செகந்தனிலற்பகாலஞ் சேருவன்சுகங்கள்செப்பே. உங

செப்பியமறையோனுன்காற் சேர்கின்றசுகத்தைச்செப்ப
வைப்பினின்மதிநான்காலே மாதாவின்பலனைமன்ன
வொப்பிலாப்புகர்நான்காலே யுரைக்கலாஞ்சுகந்தமாடை
பொற்பணிவாகனங்கள் புகலலாம்பூமின்மாதே. உச

புகலினுன்குடையகோட்போய்ப் புண்ணியராசியேற
நிகரிலாவெள்ளிநோக்க நின்றிடக்கூடிமற்றப்
பகையொடுநீசர்நோக்கப் பாபர்களில்லையாகிற்
சுகமுளசுகந்தமாலைச் சுகியனுஞ்சொல்லுங்காலே. உரு

சொல்லியமதிமிக்காரேற் சுகிப்பதுநல்லவாடை
சல்லியராகுவோடே சார்வதுகிழிந்தவாடை
வெல்லியமறையோனேடேல் வெள்ளையுஞ்சிவப்புவெள்ளி
யொல்லையில்பலவன்னங்க ளுயர்சநிகறுத்தவாடை. உசு

உயர்கின்றநான்கோன்வெள்ளி யிவர்மதிவர்க்கமோங்கத்
துயான்றிவெள்ளிதங்க பேபொன்னிவர்களோடே
வியனன்றியிவர்களுேக்க வெகுபகைநீசஞ்சேரிற்
பயனின்றிமாடுகன்று பசுக்கள்பொன்விற்கும்பாவாய். உஎ

பாவிசைநாலின்கோடாள் பண்புடைச்சுபக்கோளாக
வேவியசுபர்களுேக்க விறையவன்பிலவானுகத்
தாவியபெந்துவெல்லாஞ் சாதகன்றன்னைமிக்கா
யாவியைக்காவல்செய்யென் றநுசரிப்பார்களாமே. உஅ

அனுசரிக்கின்றநான்கோ னமையகெந்திரத்திரிகோண
மனுவடிக்கொண்டகோள்வை கேசியங்கிசங்களேற
வினைபடைக்கின்றகோட்கண் மேவநோய்க்கில்லையாகின்
மனுபதிக்குலத்தோன்பெந்து வகையெலாம்வணங்குமாதே. உகூ

வணங்குமட் டமத்தின்கோட்போய் மருவிடிற்பாபரோடே
குணங்களிற்கபடியாகக் கோதிலாச்சுகவானுவ
ணிணங்கியயுச்சமாட்சி யிவையிலட்டமத்தோனின்று
லணங்கனுய்க்கபடிலாதூ னதிகவானவனுமாமே. ௩0

அதிகநான்குடையோன்மிக்கா யாந்தநான்கிடமுமிக்காய்த்
துதிசெயுஞ்சுபர்களோக்கத்தோன்றுசாதகருக்கெல்லா
நிதியொடுசெல்வமுண்டாய்நீதிநூன்முறையிற்சொன்ன
பதியினில்வாகனத்தின்பாக்கியமுண்டுபாவாய். ௩க

பாக்கியநாலின்கோட்போய்ப்பதிந்திடநான்கிற்றனே
தாக்கியபுதனுங்கூடத்தலந்தனைவெள்ளிபார்க்கத்
தூக்கியசுபக்கோளங்கந்தோன்றுமேற்சோர்விலாமற்
றேக்கியமதலைக்கெல்லாந் தீர்க்கவாகனங்கள்செப்பே. ௩உ

தீர்க்கவான்பதியிலங்குஞ் சிறந்தசம்மந்தியாக
வாக்குநான்குடையோனந்த மாமதியதனிற்சேர
நீர்க்குடமுலையினுளே நிலைத்துவாகனத்தைச்சொல்லிற்
கூர்க்குங்காலிவனுக்கெல்லாங் குதிரைவாகனத்தைக்கூறே. ௩௩

குதிகொளுமதியிரண்டின் கூறியநான்கிலேனு
மதிசுபரோடுகூடவதுசுபராசியாக
விதிவழிதெரிந்தமேலோர் விதித்ததுவினவக்கேளாற்
பதுமதிநுதலினுளே புரவிவாகனமாம்பாவாய். ௩௪

புரவலர்நாலின்கோன்கோட்போய்ப்புகழ்மகிசனனக்கோனை
நிரவிலக்கினத்தேநிற்கினீண்டபல்லக்குவாழ்வாந்
தரணிநான்குடையோன்வெள்ளிதனித்தலக்கினத்தின்கோனு
நாரிலக்கினத்தேநின்று னண்ணியபல்லக்காமே. ௩௫

நண்ணியவிந்துவெள்ளிநான்மறையோனுங்கூடி
யெண்ணியநான்கோன்கெந்திர மேறப்பல்லக்கிலேனும்
புண்ணியமதிபார்ப்பானைப்பொருந்தவல்லதுபொன்னோக்கப்
பண்ணியபல்லக்காடைபணிதிகளிவன்பண்பாமே. ௩௬

பணிசெய்யவெள்ளியிந்துபகருநான்குடையோனென்றே
னணிசிறந்தொன்றாய்க்கூறிலவனியிற்பல்லக்கேறுங்
கெணிதநான்மறையோனுன்கோன் கிளர்மதிபிருகுங்கூடித்
துணியுமேல்கெந்திரகோணஞ் சுகிப்பதுபல்லக்காமே. ௩௭

சுகிபெறுநான்கோன்பின்னைத் தோயுமேற்பல்லக்கேறு
மகிமைநான்குடையகோட்போய் மற்றொருசுபரைச்சார்ந்து

மிகுதிநான்கதிலேநின்றால் வெண்குடைசாமரங்க
டகுதியாயிவனைச்சூழச் சார்ந்தபல்லக்குமாமே. ௩௮

சார்ந்தநான்குடையோன்கெந்திரத் தானமாயந்தராசிக்
கோர்ந்தவனிலக்கினத்தி லிருக்கவாகனத்திலேறு
மார்ந்தபத்துடையோன்பன்னென் றுகவன்னவன்பத்தாகச்
சேர்ந்திடப்பணிகளாடை சிறந்தபல்லக்குமாமே. ௩௯

சிறந்தநான்குடையகோட்போய்ச் சேரப்பன்னென்றின்மீது
பறந்துநான்கினிலேநிற்கப் பதினொன்றிற்செவ்வாய்சேற
நிறந்தருசெவ்வாயானே ணிலையில்ராசிக்காணும்
பிறந்தசேயுலகையாளும் பின்னயோவில்லைமாதே. ௪0

பின்னையொப்பில்லாநான்கோன் பேசினன்கதிலேநிற்கப்
பொன்னவனுடனுமாட்கி துடங்கிக்கெந்திரத்திரிகோணந்
தன்னிலேயிருக்கவெய்ய சாமரைகுடைபல்லக்குப்
பொன்னெடுபெந்துவீடு பூமியும்புரக்கும்பாவாய் ௪௧

பூவினிற்புதன்போயுச்சம் பொருந்தியராசியாக
மேவுமேகெந்திரகோணம் வித்தைவாகனசம்பத்தாங்
கோவுடனட்பாய்நல்ல குணமொடுங்கீர்த்திவானாய்க்
காவியங்கமலக்கண்ணாய் களிப்பொடுசெல்வங்காணே. ௪௨

களிப்புடனுலின்கோளுங் கருதுலக்கினத்தின்கோளும்
விழிப்பொடுதங்கடங்கள் வீட்டிலேமேவவொன்பா
னழுத்தியகோளுமத்தி லமைகின்றகோளிறன்குஞ்
சுழிப்பொடுசுபர்வர்க்கங்க டோன்றுமேற்பலன்சொல்வாயே. ௪௩

தோன்றுமோர்பிலன்களாகச் சோர்விலாதிலக்கினத்தி
லூன்றுஞ்சம்மந்தியாக வொருவருக்கொருவர்பார்க்கப்
போன்றதோருலகமாள்கை பொருள்சுகந்தீர்க்கவாயுள்
மேன்றகுஞ்சிவிகைகாலாண் மிகுதியாய்வேந்தனாமே. ௪௪

வேந்தன்முன்சொன்னோர்தம்மின் மிக்கதுமுக்கோளாகிற்
காந்திசேர்விசித்திரத்தின் கற்பணிவாகனங்க
டோய்ந்திடுமிரண்டுமிக்கோர் சூழ்திசையபகாரத்திற்
சேர்ந்திடுஞ்சுகங்களென்றார் தெளிந்தவல்லவர்கடானே. ௪௫

தெளிந்தநான்குடையோன்மிக்காய்ச்செயனன்குபன்னென்றேழும்
பொழிந்திடும்பிலமதாகப் புகல்கின்றராசிக்கோளு
மெழுந்தியலக்கினத்தா னுதிசம்பந்தியாக
மொழிந்தகோட்டிசைகடன்னின்மொய்த்தவாகனமுண்டாமே. ௪௬

மொய்த்தநான்குடையோனென்பான் மொழிந்தபன்னென்றேன்வா
னுய்த்தவிந்நான்குகேரு மிலக்கநசம்பந்தமாக [க்கோ
செய்த்திதாயபகாரத்திற் றிரவியலாபத்தோடு
மைத்தடங்கண்ணினளே வருமிராச்சியத்தில்வாழ்வே. சஎ

வருமென்றகோட்கணன்கு மாபிலவான்களாக
விருமென்றுநான்குபேரு மிலக்கசம்பந்தமாகத்
தருமென்றுசகலபாக்யஞ் சார்பிலவீனமாகி
லுருகின்றதுக்கிப்பாப ரொடுசுபர்சமனென்றேதே. சஅ

ஓதியனன்கோனீச ரொடுபகைதன்னைச்சார்ந்து
பாதியாரெட்டீராறிற் பதியவேநால்வர்பார்க்கத்
தீதுவாகனங்கள்சேரு மல்லதுகிணத்தின்போது
போதுறுவாகனங்கள் புவியிலென்றுரைப்பார்பூவாய். சகூ

புவியிலொன்பதினின்றேனும் பொலிந்தபத்தினினின்றேனுங்
குவியிலக்கினத்தினின்ற கோட்களுஞ்சுபர்களாகி
னவிலினுச்சங்களாக லக்கினதிபனல்பார்க்கச்
சிவிகையும்பொன்னும்வாழ்வுஞ் சிறப்பொடுசேருந்தானே. ரு0

சேர்கின்றமறையோனேனுஞ் சிறந்தநான்குடையோனேனுங்
கூர்கின்றசுபர்களோடு கூடியொன்பதிலேநிற்கச்
சார்கின்றராசிமிக்கேல் சகலபாக்கியங்களோடே
யூர்கின்றசிவிகைவாழ்வு முண்டென்பார்வெகுநாளைக்கே. ருக

உண்டென்றவிரண்டுகோளு முறுதுயர்பாபரோடே
திண்டென்றவாறிலெட்டிற் சிறந்தபன்னிரண்டுசேரப்
பண்டென்றநீசவத்த மனம்பகைதன்னிற்பாயக்
கண்டென்றமொழியினளே கனயோகமில்லைகாணே. ருஉ

கனகனுநாலின்கோளுங் கனபிலவான்களாக
வினவியவாட்சிதன்னின் மேவியேநிற்குமாகிற்
புனமயிலனையநல்ல பூவையேபுகலக்கேளாய்த்
தனமொடுபாக்யவானய்த் தண்டிகையேறுவானே. ருங

தெண்டிடநாலின்கோளுந் தனித்தவொன்பானின்கோளும்
பண்டியிற்பதினென்றுகப் பதினென்றைப்பிலத்துநோக்கத்
தெண்டிரைப்புவியின்மிக்கச் செல்வமுஞ்சிறப்புமிக்கக்
கொண்டிவன்சகலபாக்யக் குரியுளான்கூறுங்காலே. ருச

குறித்தநான்குடையகோளுங் கொத்தவொன்பானின்கோளுங்
குறித்தபன்னென்றிலேற வல்லதுநான்கைநோக்கப்

பிறித்தவாகனசம்பத்தும் பேசியசெல்வத்தோடே
கறித்தராசாச்கள்பேரு நிலவரமாகுமென்னே. ருரு

நிலமெனுமொன்பான்கேளு நீந்தியநாலின்கோளுந்
தலமுடையிவரிலக்க சம்மந்தமாகநிற்கக்
குலமுடைமறையோன்சென்ம ராசியைக்குறித்துநோக்கப்
பலனிவர்க்கரசர்பேரும் பணிகளும்பவிசும்பாவாய். ருசு

பவிசுடையொன்பானுன்கோன் பாக்கியசுபரைக்கூடிற்
புவியினிற்பிலவான்சேனு பதியெனப்புகலலாகு
நவிலுமொன்பதிலேநின்றோ னுன்கினுக்குடையோன்றானுங்
கவிசெய்தபுகர்பொன்னோடே கலக்குமேற்கருதக்கேளே. ருஎ

கலந்தவர்சுபர்வீடாகக் காரணவொன்பான்கேந்திரத்
தலந்திரிகோணஞ்சாரஞ் சார்ந்தசாதகர்க்குநன்மை
துலங்கியகுதிரையானை தூய்நரவாகனங்க
ளிலங்கியதேசமெல்லா மிவன்குடைக்கீழென்பாரே. ருஅ

இவனிற்கோளாறுமூன்று மீட்டியவொன்பான்சென்மம்
புவனத்தீராறிலுள்ள புண்ணியரெல்லாங்கூடி
கவனித்துவெள்ளியோடே கலந்திடச்சங்கைகாணு
மவனிக்குவேந்தனுமென் றமைத்தனர்தமிழையாய்ந்தோர். ருகூ

அமைத்தநான்குடையோனேனு மந்தணன்புகரானாலு
மிமைத்தவர்பிலவானாக விசைத்தவொன்பதிலேநிற்கக்
குமைத்தவொன்பதின்கோட்போம்நற் கோணகெந்திரங்களேறச்
சமைத்தவாகனனேகந் தளதங்கவானுஞ்சாற்றே. சுO

தனக்குநான்குடையோன்பார்ப்பான் சாற்றியபுகரொன்பானுஞ்
சினக்குமொன்பதுநான்கோனுந் திரிகோணகெந்திரமேனுங்
கனக்கவேகுதிரையானை கட்டியகுதிரைகாலாள்
புனக்கிளிமொழியினளே புவிக்கெலாம்வேந்தனமே. சுக

புவியினுக்கினத்தின்மாலாய்ப் பொருந்துமொன்பதிலேயுச்ச
ரிவனிரண்டுடையோன்கெந்திர மேறியேநிற்குமாகிற்
செவியினிலுரைத்தசொல்கேள் செகமெலாமவனேயாளு
மவனியிலிவனேச்சிம்மா சனபதியாமென்பாரே. சுஉ

ஆமெனச்சுபர்கள்கெந்திர மாகவொன்பதனைநோக்கத்
தேமென்றவாக்கோன்கெந்திரஞ் சேர்ந்திடச்சுபர்களோடே
போமென்றவாக்கிலுச்சம் பொருந்தியகிரகம்பூண
கோமென்றுபுவியிற்சிம்மா சனங்களைநோக்குவாரே. சுங

நோக்கிலக்கினக்கோனுன்கோ னுகருமொன்பதின்கோண்மூன்றும்
பாக்கியத்ததிபனுகப் பத்துளோன்பதுயலொன்றி
லாக்கியசுபர்களெல்லா மவனிலக்கினத்தைநோக்கி
னீக்கியபலனைச்சிம்மா கனத்துக்குநிகர்சொல்வாரே ௬௪

நிகரிலாப்பத்தின்கோனு நீண்டலக்கினத்தின்கோனும்
பகருமொன்பதிலுள்ளோனும் பத்திலேபதியப்பத்தோன்
புகழிலக்கினசம்மந்தம் பொருந்தநின்றானும்பூவிற்
சுகியனுமிவர்க்குச்சிம்மா சனமெனச்சொல்லலாமே. ௬௫

சொல்லியமறையோன்வெள்ளி தோற்றியவொன்பதாங்கோ
ளெல்லையாங்கேந்திரகோண மிவற்றிலேநிற்குமாகில்
வல்லியேயவனநேக வாகனர்க்கிசமாகை
வொல்லையின்மண்டலாதி பதியெனவுரைக்கலாமே. ௬௬

உரைக்குநான்குடையோன்பத்தி லுயர்பிலவானுய்நிற்க
நிரைத்தபத்துடையோனேக்க நின்றிடக்கூடியேனுங்
சனத்தசிம்மாசனத்திற் கனபவுசாகுமென்க
துரைத்திசையபதாரங்க டெங்குமுன்சொன்னதாமே. ௬௭

சொன்னகோனொன்பானுனேன் றேன்றிடநான்கின்மீது
பின்னமில்லாதநான்கோன் பிறந்தலக்கினத்திற்போக
வன்னதுசுபர்வீட்டாக வதிசுகவானுமாகி
யின்னல்செய்சத்துருக்க ளிருநிதியிவனுக்காமே. ௬௮

இருநிதியிவனைச்சேரு மேழின்கோனொன்பதாகத்
தருசுபர்நோக்கமிக்கோற் றனம்பொருளற்பகாலங்
கருதியித்திரியினுலே கனபொருளிவனைச்சேரும்.
பெருகியசுகமாமென்று முரைக்கலாம்பேதைமாதே. ௬௯

பேதையேநாலின்கோட்போய்ப் பெருகியசுபனுஞ்சேரக்
காதையாந்திசையிலேனுங் கனியபகாரத்தேனுங்
கோதையேசுகமுண்டென்பர் கூடுதல்பாபராகித்
தீதையாஞ்சுகங்களில்லைத் திசையில்லாச்சுகமாஞ்செப்பே. ௭௦

திசையிலாநான்கின்ராசி தீதன்றிச்சுபர்வல்லாரேல்
வசையிலாநாலின்கோட்போய் வாழ்ந்திடச்சுபர்களோடே
யிசையவேசேயுங்கூடி யிவன்வெகுசேத்ரந்தேடி
யசைவிலாச்சுவாத்தியங்க ளடிமையாலவன்பண்பாமே. ௭௧

அடிமைநான்குடையோனீச வத்தமனங்களாகக்
கடுமெனக்காலாண்முற்றும் போஞ்சட்டிபாகந்தோன்றக்

கெடுமென்பாவர்கள்கூடிற் கெடுப்பவர்பொன்கீர்த்தியாக
நடுமெனச்சேத்ரசுவாத்ய நாசத்தைபடையுமாதே. எஉ

நாசமில்லாதலக்கி னுதிபனிருந்தராசிக்
கேசலுண்டாகநாலா மிராசிக்கோள்சத்ருவாகி
னேசமில்லாதான்போன நெடுந்திசையபகாரத்திற்
பூசலுண்டாகிவீடும் பூமியுநாசம்பூவாய். எங

பூமிக்குண்மிக்கநான்கோன் புரிதிசையபகாரத்தி
னேமித்தசெந்துசாவார் நீலன்செய்குளிகன்கூடிற்
சேமித்தநான்கோனோடே சேர்ந்திடசதீமையெல்லா
மாமிக்கவனர்த்தமெல்லா மவனுக்கேயேதுவாமே. எச

அவனுக்கும்வாக்குவிட்டோ னந்தநான்குடையோனோடே
யிவனுக்கென்பதிலேநிற்க விதுசுபராசியாகக்
கவனித்தசுபருங்கூடக் கடந்தபொன்ஞென்றைவாக்கோன்
மவுனுற்றுநான்கிலேற வருநிட்சேபங்கண்மாதே. எரு

வருமென்பர்வாக்குநாதன் மகிமையாஞ்சுபரைச்சேரிற்
றிருமென்பர்சுபர்வீடேற லிவனிட்சேபங்கைக்கொள்வன்
பொருமென்றபதிநோராங்கோள் புண்ணியருடனேகூடித்
திருவென்றநான்கிலேறச் சேருநிட்சேபந்தானே. எசு

சேர்கின்றவாக்கின்கோளுஞ் சிறந்தபண்டின்கோளுங்
கூர்கின்றநாலின்கோளுங் கொடியபாகர்களைச்சேர்ந்து
நேர்கின்றதலமாறெட்டு நிறைந்தபன்னிரண்டினிற்க
மார்கொண்டமுலையினுளே மனைகள்போய்நாசமாமே. எஎ

மனையெனுநான்கினீச வத்தமனங்களாக
வினையெனுங்கிரகஞ்சார வினுவதுகிணற்றிலென்க
முனையெனுநான்கிற்பாபர் மொய்திடப்பாபியாகு
மினையதிர்சநிபோய்நிற்கி லிவன்சுகமில்லாமற்றுனே. எஅ

இல்லெனுநான்கின்கோட்போ யிசைந்தபன்னிரண்டிலேறச்
சொல்லுவரன்னியதேசஞ் சுக்ரதன்னியநட்பேனு
மல்லதுநான்கின்கோட்போ யாறெட்டிலமையுமாகிற்
சொல்லுவானவன்றுயாதி தேடியமனையிற்றேனே. எகூ

தேடியபன்னிரண்டோன் சிறந்தவாக்குடையோனுன்கோன்
கூடியமூன்றுறெட்டிற் கொடியபன்னிரண்டுங்கூடி
யோடியதிசையிலேனு முறுவவகாரத்தேனு
மேடையானிவனிருந்த வீட்டைவிட்டேகுவானே. அ0

வீட்டுக்கோள்கேந்திரகோண மேவியேபிலவானுகக்
கூட்டுங்கோடகனேயெண்ணிக் கொண்டிவன்குடியிருப்பாய்
நாட்டுமெவ்வீட்டைச்சொல்ல நாலின்கோட்பனிரண்டாகிற்
கேட்குநாற்பிரிந்தகூறை கட்டியவீடதாமே. அக

கிட்டியநாலின்கோட்போய் கெந்திரத்ரிகோணஞ்சேர
மட்டிலாப்பிலவானுக வல்லதீராறுதன்னி
லொட்டியேபிலவானுகி லுயர்மனைவிச்த்ரமாகக்
கட்டியேயிருப்பானன்றோ கன்னியேகேட்குங்காலே. அஉ

கன்னியேமூன்றுதன்னிற் கலந்திடச்சுபர்கணுன்கோன்
மின்னியேபிலவானுக மிக்கோபுராங்சமேற
வுன்னியமனையின்வீட்டை யுறுபிலமாகக்கட்டி
மன்னியேகுடியிருப்பாய் வாழுமென்றுரைப்பர்மாதே. அங

வாழுமைந்துடையகோட்போய் வன்றொடும்பாபரோடே
மீளுமந்நான்கிலேற வீடுசேத்திரங்களெல்லாங்
கோளுமாய்க்கிரயத்தாலே கொள்ளுவார்கொள்வதல்லா
லாளுமட்டவன்கொரோன் கிசமெனிலதுபொல்லாதே. அச

அதிகமாஞ்சுபர்மூன்ருக வந்தநான்குடையோன்மிக்கேற்
புதுமையாமூன்றின்கோளும் பூரணபிலமதாக
வெதுகையாங்கல்லினுலே யிசைத்தவீடிவனுக்கென்பர்
துதிசெயுநான்கின்பேறு தொலையுமோசொல்லின்மாதே. அரு

நான்காம்பாவம்-முற்றிற்று.

## ஐந்தாம்பாவம்.

துலைவிலாவைந்தாநோக்கிற்சுகபுத்ரராசயோகஞ்
சிலையெனுத்தெய்வந்தந்தை செய்யும்புண்ணியங்கள்செப்ப
மலைவிலாதேழினுலும் வழுத்தலாமைந்தர்யாத்ரை
தலைமைநான்கால்வெய்யோனுற் றந்தையின்செய்திசாற்றே. க

தந்தையின்செய்தியல்லாற் றக்கநூன்மறையோன்சால
மைந்தர்கள்செய்திசொல்ல மற்றிவையிரண்டினேடே
சிந்தையிற்புகரைநோக்கத் திரிகளின்பலனைச்செப்ப
விந்தையாமைந்தனேக்கி மிக்கதைவிளம்பலாமே. உ

மிக்கவைந்தினிலேயாண்கோண் மேவிடப்புருடர்நோக்கத்
தக்கதேவதையுமாணுந் தையலாய்சாற்றக்கேளாய்
புக்குவோர்நோக்கோர்பெண்ணேற போற்றுவானறிதெய்வத்தை
சிக்கவாதித்தன்பார்க்கச் சிவனையேநேசிப்பானே. ங

சிவமெனுமனதறிந்து சேர்ந்திடநோக்கத்தேவி
புவனைசேய்தங்கணேக்கம் போற்றவான்கந்தவேளைக்
கவனித்துப்புதன்போய்நோக்கக் கருதுவான்விஷ்ணுபத்நி
மவுனத்தின்மறையோனேக்க மகாதேவிசிவனுமாதே. ௪

மகாபுகரைந்திலாக வல்லதுநோக்குமாகிற்
சிகாமணியனையாய்லக்ஷிமி தேவியையாதரிப்பான்
விகாதமாஞ்சனிபோய்நிற்க வெஞ்சனியைந்தைநோக்கிற்
றகாரேனும்ருத்ரதெய்வந் தன்னையாதரிப்பன்றானே. ௫

தன்னிலத்தினத்தின்கோளுந் தனித்தவைந்துடையகோளு
மின்னியவேழில்நிற்க விரோதங்கடெய்வத்தாலா
முன்னியகோட்கடங்க ளுற்றராசிகளால்நின்றான்
மன்னியசுங்கடேவாம் வருமெனவுரைப்பர்மாதே. ௬

வருமெனுமைந்திற்புத்தி மறையவன்வெள்ளுகூடிற்
றிருநிறைந்திருக்கவந்தச் செப்பியமுக்கோணேக்கம்
பொருபடையரசர்நோக்கும் பொருளுஞ்சம்பத்துமுண்டாய்ப்
பெருகியசெல்வந்தங்கு மென்றனற்பேதைமாதே. ௭

பேதகமில்லாவைந்திற் பிழையுறும்பாபர்சேரப்
பாதகர்பாகந்தன்னிற் பதிந்திடவைந்தின்கோளின்
சாதகன்வித்தையில்லான் சார்வில்லையரசரோடே
கோதறுகுணவானுவான் கூறலாங்குழந்தைமாதே. ௮

குழந்தையினுன்கோநேராய்க் குறித்தலக்கத்தோனுன்காய்
வளர்நத்தைக்கிரகம்பார்க்க மன்னியகிரகஞ்சாரத்
தளங்களாய்நாற்கால்சீவன் றன்னைப்போற்பிள்ளையுண்டாம்
பிளந்தவாய்ராகுகூடிற் பிறப்பதாமெனன்றுபேசே. ௯

பிறந்தவர்வாக்கோனேழான் பெருகியவைந்தோனுன்கோன்
சிதந்தநால்வருமொன்றாகத் தீயவர்சேரநோக்க
நிறந்தருகமலக்கண்ணாய் நிலவரமிவர்க்குப்பிள்ளை
யுறங்கியகுரங்குபோலே யுண்டெனவுரைப்பர்மாதே. ௧0

உண்டென்பார்பின்னேகன்னி யோரைசென்றைந்திற்றீயோர்
பண்டென்பார்மீனந்தன்னிற் பதித்திடச்சுபர்பாபேர்
றிண்டென்பார்சேயானுஞ் சேர்ந்திடத்தீயோர்சேரக்
கொண்டென்பாரைந்தினுலேல் குழந்தைசாமென்றுகூறே. ௧௧

குழந்தையாமைந்தின்கோளுங் குறித்தவொன்பானிற்கோளு
மிளந்தையாமேழில்நிற்க விதுதிராசியாக

வளந்தழைதிங்கள்வெள்ளி வாக்குறநோக்கவன்றித்
,தழைந்துமுன்சொல்வதோடே சாவல்லாருமாமே. ௧௨

சார்வறமறையோனின்ற தலத்துக்கைந்தாமிராசி
சேர்பெறத்தெளிந்துமற்றச் செய்தியைத்தெரியச்சொல்ல
நேர்பெறவைந்தின்வெள்ளி நிலவிடவர்க்கமாகப்
போருறவெள்ளியிந்து பொருந்திடநோக்கம்பூவாய். ௧௩

பொருத்தமில்லாதபாபர் போக்குநோக்கில்லையாகில்
வருத்தமில்லாமற்பிள்ளை வருமென்பர்சுகங்கண்மற்று
நிருத்தவன்சனிசேயைந்தி னின்றிடநோக்குநேமித்
தொருக்கருங்குழவியில்லை யுண்மைசாதகர்க்குத்தானே. ௧௪

உண்மையென்றுரைத்தவைந்துக் குடையவனேழிலேறித்
தண்மையிற்சபர்கள்ராசித் தலமெனக்கிசங்களேறத்
திண்மையிலந்தோனோடே சேர்ந்திடச்சுறந்தோர்நோக்கப்
பெண்மையான்மைந்தன்கெந்திரப் பிரிவினாற்பேறதாமே. ௧௫

பிறித்தவைந்துடையோன்சொட்சேத் திரங்களேற்பிள்ளைகொஞ்ச
மறித்தவைந்துடையோர்னின்ற வங்கிசத்துடையகோட்போய்ச்
செறித்தசொட்சேத்திராங்கஞ் சேர்ந்திடப்பிறந்தசேய்க்குக்
குறித்தனனென்றேபிள்ளைக் கூடவேரில்லைகோதாய். ௧௬

கூட்டியவேழொன்றைந்திற் குறுகிடப்பாபர்கூட
வாட்டியபாபர்நோக்கமாவில்லைமேலாமற்றும்
பூட்டியதிரியில்லானும் பொலிந்தவைந்துடையோனன்று
கேட்டிலாறெட்டீராறிற் கேடரேற்குலங்கேடாமே. ௧௭

கேடிலாவைந்தில்ராகு கிளரவைந்துடையோனாறெட்
டோடுபன்னிரண்டிலேற லொருபிள்ளையேனுமில்லை
நாடியவைந்திற்சென்ம ராசிக்கோணிற்கவைந்திற்
றேடிலக்கினத்தோனின்றாற் றெத்துபுத்திருண்டாமே. ௧௮

தெத்துலக்கினத்தின்கோளுஞ் சிறந்தவொன்பானின்கோளும்
பற்றிலாறெட்டீராறிற் பதிந்திடப்பாபர்பார்க்க
வெற்றியாங்கோணகேந்திர மேவியரவரேயாகிற்
புத்திரர்தெத்தாமைந்தோன் போய்நின்றபலனார்சொல்லே. ௧௯

போய்நின்றராசியான ததுபுண்ணியராசியாக
வாய்நின்றவவர்கள்கூட வன்னவர்சுபரேபார்க்கத்
தாய்வென்றவாலிபத்திற் றேன்றுவான்மதலையென்ப
பேய்கொண்டராகுவோடேற் பிள்ளையுஞ்சாவதாமே. ௨௰

பிள்ளைபைந்துடையகோளும் பேசியவாக்கின்கோளுந்
தள்ளியபலவினங்க ளாயைந்தைப்பாபர்நோக்கக்
கொள்ளையாய்த்திரிநாட்சென்று குழவியின்பேறுமுண்டாங்
கிள்ளையின்மொழியினுளே கிட்டியபலனிதாமே. ௨௧

கிட்டியவைந்தொன்பானிற் கேடிலாச்சுபக்கோணிற்கத்
தெட்டியவாரோன்பார்க்கத் திரியபசாரியாடித்
தொட்டிலிற்பிள்ளை தூக்கித் தூரத்தேகுரலொலிக்கத்
தட்டிபோராட்டுமென்பார் தக்கசாத்திரங்கற்றூரே. ௨௨

தக்கியவைந்திலேந்தோன் சார்ந்திடவல்லாநோக்க
முக்கியமறையோன்றானு முகிழ்த்தநற்கோளுநோக்கப்
புக்கியவைந்துதன்னிற் புண்ணியர்தாமுங்கூடச்
சிக்கியசாதகர்க்குச் சிறந்தமைந்தர்களுண்டாமே. ௨௩

சிறந்தவன்பிறந்தராசித் தினகரனைந்திலேறக்
கறந்தவைந்துடையகோளுங் கன்பிலவானுய்நிற்க
நிறந்தருமறையோன்றானு நிறைபிலவானுய்நிற்கிற்
பிறந்தசாதகர்க்குத்தானும் பிள்ளையுண்டென்னலாமே. ௨௪

பிள்ளையுண்டென்றவைந்திற் பிலன்களால்மறையோனிற்க
வள்ளைபைந்துடையோன்பார்க்க மைந்தனுமறையோன்றானுந்
துள்ளிவைகேசியங்கந் தோன்றியைந்தோனைநோக்க
மெள்ளவந்துடையோன்பார்க்க விளங்குமைந்தர்களுண்டாமே. ௨௫

விளங்கியபத்திலேதான் விண்மதியுருக்கவெள்ளி
யழுங்கியபாபரோடே யமைந்துநாலிடத்திலாகப்
புழுங்கியநோய்களாலும் பூருவபயன்களாலு
மெழும்பியகுழவியெல்லா மிவனுக்குநாசமாமே. ௨௬

இவனுக்காறெட்டிலேறே யிருக்கலக்கிரத்தின்கோடான்
றவனுற்றபாபரோடு சார்ந்திடவேந்தின்கோட்போய்
கெவனித்தநீசஞ்சத்ருக் கிரகங்களாகப்பார்க்க
நவனித்தபுத்ரரெல்லா நாசமாநண்ணுங்காணே. ௨௭

நண்ணியசனனமேழு நலங்களொன்பதுமீராறிற்
றண்ணியபாபரிந்தத் தலங்களிற்சார்கின்றூலு
மெண்ணியவேழிலேனு முகந்திடப்பாபரெல்லாந்
திண்ணியவங்கமெல்லாஞ் சேரநாசங்களாமே. ௨௮

சேரவேவயதுபோனாற் சிறுயெனவுடம்புவற்றி
யாரநோக்காட்டுக்காரி யக்குலுந்தளர்ச்சியாவார்

ரேமில்லாதாள்காயந் தூலத்தான்மலடுதோன்றி
யேரிளவயதுபத்தா யெட்டுக்குமிலேப்பேறென்னே. ௨௯

எட்டியமறையோன்சென்மத் திறையவனேழின்கோடான்
கட்டியவைந்தின்ராசிக் கதிபதிநான்குபேரு
மொட்டியபிலவினங்க ளூற்றுறஞ்சுரதகானே
மட்டலர்குழலிஞளே மலடியென்றுரைக்கலாமே. ௩0

அன்பதுவயதாள்வற்ற லானவள்ரோகக்காரி
யின்புறவிலக்கமில்லா ளிடையினிலேநோயாளுண்
முன்பிணைப்பருத்தகாய முன்னமேமலடியாளு
ளென்பதுவயதுபத்தா ளெட்டுக்குங்குழவியில்லாள். ௩௧

குருவொடுலக்கநாதன் குணமுடனேழிற்கோடான்
றருபலனைந்துநாதன் சார்ந்திடுமோரைதன்னின்
மருவிடப்பிலமேயீன மாகவேவந்தோனுக்குத்
திருவுளமறியநாமே செப்பினேம்புத்ரரில்லை. ௩௨

புத்திரத்தானமீதிற் புகழ்பாபரிருக்கவைந்துக்
குற்றவனீசமாக வுறைந்திடச்சுபர்கள்பார்வை
சற்றுமேயில்லாதாகிற் சாதகன்றனக்குப்பிள்ளை
சுத்தமாயில்லையாணிற் சொல்லுவர்மலடனென்றே. ௩௩

கோதிலாமறையோனிந்து கூடிலக்கினத்திலேகத்
தீதிலாவைந்திற்பாபர் சேர்ந்திடச்சிறந்தநற்கோ
ளீதியானேக்காதாகி னிலவர்முன்னேரெல்லாஞ்
சோதியாய்மலடனவர் சுற்றியகிரகத்தாலே. ௩௪

சுற்றியவைந்தின்பாபர் தோன்றிடச்சூழ்ந்தவைந்தோ
னெற்றியபரமாமத்தி யிவைகளிலிருக்கவின்ப
முற்றியசுபர்கள்சார்பு முழுநோக்குமில்லையாகிற்
சத்தியமலடனவள் தையலேசாற்றினேமே. ௩௫

தையலேமறையோன்பாபர் தங்கண்மத்தியிலேசார
வெய்யவைந்துடையோன்ருனும் வெகுபிலவீனமாகத்
துய்யநற்கோட்கணேக்குந் தோய்வதுமில்லையாகில்
வையகந்தனிலொப்பில்லா மலடனென்றுரைப்பர்தாமே. ௩௬

மலடனுமிந்துவைந்து மாலுடன்வீடதாக
விலையெனிற்சனியீடாக வியல்சனிகுளிகன்கூடத்
தலமதைக்குளிகன்காரி சாயலாய்நோக்கினுலுஞ்
சிலைநுதலனையாய்தெத்துப் புத்ராய்ச்சிறப்பர்தாமே. ௩௭

சிறந்தவஞ்சகலைப்பாபர் தெளிவுறநோக்கத்தேவாற்
பிறந்தபிள்ளைகள்சமானங் பிச்சிலையந்தினினின்றாலு
மறந்தவர்நோக்கினாலு மந்தணர்சாபததாலே
பிறந்துபோம்பிள்ளையெல்லா மென்றனரியம்புங்காலே. ௩௮

இயம்பியவைந்தோன்சேரியா டணுகிடவினியவானே
னயம்படநோக்கநல்லோர் நாட்டங்களில்லையாகின்
மயங்கியசத்துருக்கள் வருத்தியதோடத்தாலே
மூயங்கியமைந்தர்சாவா மென்றனர்மோகமாதே. ௩௯

மோகித்துநான்கிற்பாபர் மெய்த்திடநான்கோனேகி
வேகித்தசனியைச்சேர வேறுளபாபக்கோட்க
டாகித்தபனிரண்டெட்டிற் சார்ந்திடத்தாய்தோடத்தாற்
போகித்தகுழவியெல்லாம் புவியினிறசமாமே. ௪௰

புவியினுண்மிக்கபாபர் பொருந்தியொன்பதிலேநிற்கச்
சவியுறுமைந்தின்கோன்போய்ச் சனியுடன்சார்ந்துநிற்கக்
குவியுமைந்துடனொன்பானிற் குளிகள்போய்க்கூடுமாகி
னவிலுறும்பிதிர்தோடத்தா னூடியமைந்தர்சாவே. ௪௧

நாடியராகுகேது நயம்பெறுமைந்திலாகத்
தேடியவைந்தைநோக்கச் சேய்பலவீனஞ்சாரக்
கூடியேயைந்தினின்ற கோள்பலவீனமாகிற்
சாடியேசர்வதோடந் தங்கியேமைந்தர்சாமே. ௪௨

தங்கியமறையோனைந்தோன் றனித்தவேழுடையோன்மூவர்
பொங்கியேசேயினோடே பொருந்திடப்பொருத்தமில்லா
மங்கியதுட்டத்தெய்வ வாதையான்மைந்தர்சாவாஞ்
சிங்கிகொள்விழியினாளே தெளியுங்காற்செவ்விதாமே. ௪௩

செவ்வியவைந்தினின்றோன் செனிற்பிறவினனுக்கக்
கொவ்வையாமைந்தின்கோளாற் குறித்தபேர்க்கில்லையாகிற்
கௌவ்வியகுழவியில்லை காரணந்தெத்துப்புத்ரர்
மௌவலகுழலினாளே வருகின்றபலனிதாமே. ௪௪

வருகின்றமதிபோய்ப்பாவர் மனையிலேவாழவைந்தோன்
பெருகின்றவொன்பதாகப் பிறந்தலக்கினத்தின்கோள்போ
யுருகின்றதிரிகோணங்க ளுற்றிடவுற்றபேறுக்குப்
பொருகின்றமைந்தர்தெத்துப் புத்திரரெல்லாம்பூவாய். ௪௫

புத்திரத்தானமைந்தோன் போகரெட்டித்தராசி
மித்திரமல்லானலா மிடத்தினிலேனுஞ்சாரச்

சித்திரச்சுழிணைக்கஞ் சேர்ந்திடசிறந்தபேர்க்கிங்
குத்திரமுரைக்கின்மைந்த குறுவதுதெத்தன்றேதே. ௪௬
ஓதியவைந்தின்கோட்போ யுயர்சுபக்கமேற
நீதிருன்மறையோன்வெள்ளி நிற்பதுந்தங்கடங்க
ளாதியாகியசொட்சேத்ர வங்கிசமேறத்தெத்தாய்த்
தீதிலாக்குழவிபின்னுஞ் சேர்க்கைவேறெனினுஞ்சேயே. ௪௭
சேயுறுமென்றுசெப்பும் திறங்களையறியவேண்டி
லாயவைந்துடையோனென்பா னந்தணன்மதியிற்கோட்கள்
போய்வருதிசையிலேனும் புரியபகாரத்தேனுந்
தோய்வுறுகுழவியுண்டாஞ் சொல்லியகுறியிதாமே. ௪௮
சொல்லியதலத்தைத்தாங்கோள் சோதிடமைந்தப்பார்த்தோ
னில்லெனுமைந்தினின்றோ னிவர்களிலெவனானுலுஞ்
சல்லியமிலவினங்கள் சார்ந்தவன்றலமாறெட்டிற்
புல்லியதலமூராறற் போனதான்மக்கள்போமே. ௪௯
போமெனமுன்புசொன்ன புண்ணியர்நாலுபேரு
மாமெனும்பிலவானுகி லவர்திசையபகாரத்தி
னேமமாம்புத்ரப்பிராப்தி நிகரிலாச்சம்பத்தோடே
கோமதன்கலுவையுண்டாங் கொடியிடைமடநல்லாளே. ௫௦
கொடியிலாவைந்திராசிக் குடையவன்சுபக்கோளாக
கடிதினுன்மிக்கவெய்யோன் கலந்திடச்சுபர்களோடே
விடுதியாமைந்துதன்னின் மேவுவோர்சுபர்களாகிற்
றுடியினுவிவன்றந்தைக்குச் சுகமெனச்சொல்லலாமே. ௫௧
சொல்லுமைந்துடையகோளுஞ் சூரியன்றானுமிக்காய்
வெல்லும்பாராவதாங்க மேறிடவில்லையாகிற்
சொல்லுவதுச்சமாட்சி யங்கிசஞ்சேர்கின்றாலு
மல்லுறுபுயத்தான்றந்தை வலிதீர்க்காயுள்தானே. ௫௨
வலியவைந்துடையகோளு மற்றவாதித்தன்றானுங்
கொலுவிருப்பதுவெவ்வேறே கொரேநீசாங்கமேறக்
கலியெனுங்குளிகங்காரி கன்னெடுங்கலந்தநின்றான்
மெலிவுறத்தந்தைசாவா மெய்யெனவிளம்பலாமே. ௫௩
மெய்யெனுந்தலமாமைந்தோன் விளங்கியசுபக்கோளாக
நெய்யவேநீசவத்த மனம்பகைராசியேறித்
தொய்யுமென்கொரேச்சஷ்டி யங்கிசந்தோன்றுமாகிற்
றெய்யலேயிவணைப்பெற்ற தந்தைதுக்கஞ்சார்வானே. ௫௪

தந்தைசெங்மித்தராகி தனக்ககந்திரைந்தைச்சார்ந்தால்
விந்தையாங்குழவிதந்தை மேவியகண்களாவான்
மூந்தியதந்தைராசி மூன்றிவன்செனனமாகின்
மைந்தர்கடந்தைசொற்கீழ் வசப்படுமென்னலாமே. ௫௫

வசப்படாதென்பர்தந்தை வந்தலக்கினத்துக்காறெட்
டிசைத்தவன்செனனமாகி விஷசத்துருவாமென்பார்
துசப்படத்தந்தைசென்மந் தோன்றியகுழவியெல்லா
நிசப்படத்தந்தைசொற்கீழ் நிற்குமென்றியம்பலாமே. ௫௬

நிற்குமென்றுரைத்தவந்தோ னிலையிலவீனமாகத்
திற்குசந்திரனின்கோள் செனித்தலக்கினத்தின்கோளுந்
துர்ப்பிலவீனமாகச் சொல்லியநான்குதானும்
தப்பியலக்கந்தானேற் றுய்கர்ப்பத்தோடுசாமே. ௫௭

தாயுறுகதிரோனின்ற தானியங்கிசத்திலேனுந்
தீயுறுந்துக்கப்பாலரந் திரிகோணந்தன்னிலேனும்
போயுறக்கதிரநாளிற் பொருந்தியதாய்தந்தைக்கு
நோயுறுமுபாதியுண்டா மென்றனர்நோக்குங்காலே. ௫௮

நோக்கியகதிரோனின்ற நெய்யவங்கிசத்தினுன்றன்
றேக்கியநவாங்கிசத்து வாதசாங்கிசங்களெண்ணிற்
றூக்கியதவத்தைநோக்கிச் சந்திரன்வந்தகால
நாக்கினுற்றந்தைதாய்க்கு நலனிலாத்துயரந்தானே. ௫௯

நலனிடநாலின்கோளு நல்லவந்துடையகோளும்
பலனிலாவாறெட்டோடே பன்னிரண்டினிற்பாப
விலையிலாத்தந்தையந்திய முகத்தினில்விழிக்கமாட்டான்
றலமதையன்றியைந்தோன் சார்ந்திடச்சமயஞ்சார்வே. ௬௰

சமைத்தவைந்துடையோனல்லோர் தங்களங்கிசங்களேறி
யிமைத்தநல்லோரைச்சேர விவன்றனைச்சுபர்களேக்க
வுமைக்கரம்வளர்ந்ததென்ன வலசினிலன்னதான
மமைத்திடுமெனிதேசொல்ல வைந்திறைப்பலனையம்மா. ௬௧

ஐந்தாம்பாவ-முற்றிற்று.

—:*:—

## ஆறும்பாவம்.

———*———

அஞ்சியவாறைநோக்கி யவதியாக்கினைகள்புண்கண்
மிஞ்சியசத்ருவோடே வினைசெய்நோய்களெல்லா
நெஞ்சினிலாகத்தேர்ந்து நிலையின்றகோளைநோக்கி
வஞ்சியின்கொடிநல்லாளே வகுத்துரைக்கின்றவாறே. ௧

வருப்புடையாறின்கோணு மான்மதியிவர்கணன்று
மிருப்புடன்கூடலக்ந மேவசம்மந்தியாகத்
தொகுப்புடைக்கோசந்தன்னிற் றோன்றியபுண்களாலே
யுகுப்புடையல்லியாவ ரொண்டொடிக்கிவனொவ்வாதே ௨
ஒவ்வுமேழுடையோன்வெள்ளி யுரைத்தவாறிடத்திற்சேரச்
செவ்வியசனிசேய்பார்க்கச் சேர்வன்சத்துருவால்வாதை
யெவ்வுமாறிடத்தினற்கோ ளிருந்திடவில்லைநோக்க
நவ்வியாதினினின்றோரை நாடிசத்துருப்புண்ணுமே. ௩
காமமாறுடையோன்சென்ம நாயகன்கதிரோன்றானும்
தீமையாம்பகைநீசங்கள் சேர்ந்திடப்பிலவீனத்தா
னேமமாரதனைச்சார நெறிநட்போர்சென்மஞ்சேரத்
தாமுறுதங்கைதவங்கஞ் சத்துருபயத்தனுமே. ௪
சத்துருவென்றுசொன்ன ஞானக்கோன்மூன்றுபேரும்
பற்றிநட்புச்சமாட்சி பதியவர்க்கோத்தமாக
வுற்றதாயாதிக்கார ருபாதியுமுடம்பிற்புண்ணு
மற்றலத்துடையோராலே வருமெனவுரைப்பர்மாதோ. ௫
வருமெனவுரைத்தவாறோன் வக்கிரத்தமனநீசம்
பொருமெனவாறினிற்கப் புக்குந்தாயாதிதுன்ப
மருவிலத்தாறில்வெய்யோன் முதலெந்தக்கிரகமேனுஞ்
சருவுமேயவர்கண்மூலஞ் சத்துருபீடைதானே. ௬
சத்துருத்தலமாயாறோன் சாரத்தீக்கோண்முக்கோணக்
குத்திரர்பயம்பசும்பொன் கொடியநாசங்களாகு
மித்திரர்சுபர்மூன்றோடே மிருந்திடப்பிலவானுகிற்
சித்திரப்பசுக்கள்பொன்க டிரவியங்குதிரைசாவே. ௭
திரவியவாறின்கோளுஞ் சேர்ந்துநிற்கின்றகோளு
திறவியபசுக்கோளார நிற்ககேந்திரத்திரிகோணம்
பரவியசத்ருதன்னாற் பயமிலைப்பயிற்றியாறோன்
குரவிநின்றோனுமிக்கேல் கொஞ்சம்பொன்னசங்கூறே. ௮
கொஞ்சமென்றியம்புகின்ற கோருரண்டதின்மிக்கொன்றேல்
வஞ்சகர்பயமும்புண்ணும் வருவதுகொஞ்சமாகு
நெஞ்சினிலாறிலேனு நிற்கவன்னவனோடேனும்
பொஞ்சியபிலவீனத்தாற் பொருத்தினுபாதிபொன்னே. ௯
பொருத்தியவேழின்கோட்போய்ப் புகழிலாப்பாபரோடே
யிருத்திலக்கினத்திலேற மேனியிற்புண்ணுமெங்க

தாத்தியவைந்தொன்பானேற் சார்ந்தவைதிருமென்க
நெருங்கியதலங்கள்வேறே னீக்கியுள்ளோர்கடாமே. ௰

நீக்கியகலமாறேனு நிகரிலாவேழிங்கோனுந்
தேக்கியகதிரோனேடே சேர்ந்திலக்கினத்திலேற
நோக்கியசிரசிற்புண்ணுப் நொய்யவெண்மதியைச்சேரிற்
போக்கியமுகத்திற்புண்ணும் பொலிவெனப்புகல்வர்பூவாய். ௰௧

பொலிவுறுசேயோடாகிற் புண்கழுத்தினிலாமென்க
மெலிவிலாப்புதனோடாகில் வெடித்தபுண்ணுவிக்குள்ளே
வலிவிலாமறையோனோடே வாக்கியதலத்திற்புண்ணும்
கலிவிலாப்பிருகோடேறக் கண்ணிலேபுண்ணுண்டாமே. ௰௨

கண்ணிலாச்சனியைச்சேரிற் காண்பதுவாய்வுரோக
மொண்ணியராகுகேதுக் குதரத்தேவியாதியுண்டா
மண்ணிலக்கினத்தோன்மாலை மருவிமாலாலேநோக்கக்
கண்ணியர்கவியதானத் தலத்தெலாம்புண்கடானே. ௰௩

தலமிலக்கினத்தோடெந்தத் தலங்கணோராகுதங்கி
பிலங்கியபுகரானேக்கி பியர்சங்கியுடனேகூடிப்
பலனிலாவாறேமேனும் பதிந்திடப்பிறந்தபேர்க்குப்
பிலனுறுங்குதிரையாவாற் பேசியபயமுண்டாமே. ௰௪

பேசியவாறின்கோட்போய்ப் பிலமிலாவீனமாகக்
கூசியபாபர்பார்க்கக் கொடியசோடானுங்கூடத்
தேசிகன்றனக்குச்சார்வந் தீமெனுஞ்சத்ருபீடை
மாசிலாதுரைக்கவேண்டிங் மயிலியற்சாயன்மாதே. ௰௫

மயிலனையத்தான்மாறேன் மருவவாவெட்டிராறிற்
செயலிரைசேவத்த மனங்களேச்சேருமாகில்
வியனிலாவிலக்கினத்தோன் வெகுபிலவானுயிற்கிற்
பயனிலாஞ்சத்ருவாலே பயமில்லையென்பர்பாவாய். ௰௬

பாவையேயாறின்கோட்போய்ப் பதிந்திடக்கோபுராங்சஞ்
சேவைசெய்கதிரோன்பார்க்கச் சென்மலக்கினத்தினும்
பூவையேபிலவானுகப் பொருந்திடச்சகலபேர்க
ளாவியைக்காப்பான்சொல்ல வரிதாறின்பலன்கடானே. ௰௭

ஆரும்பாவம்-முற்றிற்று.

---

## ஏழாம்பாவம்.

அரியகாமேழைநோக்கி யமையுறுதிரிகள்காமந்
துரியயாத்திரைசுகங்கள் புத்திரர்தோற்றந்தானு

மூரிய தாய்வருமைந்தர்க்கு முறுசுகமுள்ளதெல்லாந்
தெரியவேயழநோக்கிச் செப்பலாஞ்செகத்தின்மாதே. க

செகத்தினிலேழிலேழோன் சேர்ந்தசுக்கிரனும்பாம்பும்
பகுத்திடவிவனநேகம் பரத்திரிகமனந்தானுந்
தொகுத்திடுமேழிற்பார்ப்பான் மூன்றிடநோக்கத்தோய்வி
னிகழ்ச்சியாய்ப்பரத்தைவிட்டி னேமியாமென்னலாமே. உ

சேமித்தவேழின்கோட்போய் விற்கவாறெட்டீராறிற்
காமித்தபாபரேழிற் கலந்திடநோக்குங்காரி
யூதமித்திரியில்லாறு முரைத்தவேழுடையோன்வெள்ளி
தேமிக்கிற்பாபராகிற் றெகிட்டிடாக்கன்மிதானே. ௩

தெகிட்டிடாவேழின்கோனுஞ் செய்யசுக்கிரனுமாகப்
புகட்டிடாச்சுபர்கள்ராசி பொருந்திடச்சுபர்களாறே
பகட்டிடாச்சுபர்களேக்கிப் பாலகன்பிறக்குமாகின்
மிகுத்திடும்புவியின்மேலாய் வெண்குடைக்கிசமானாமே. ௪

வெண்குடையினில்வில்வாக்கோன் மிக்கவாருடையோனேழோன்
கண்படுபுகரிந்நால்வர் கலந்துலக்கினத்திலேறத்
திண்படுபாவக்கோனுஞ் சேர்ந்திடப்பிறந்தமைந்தன்
பண்புறுகாமத்தா !ல பசிபதிதங்களாமே. ௫

பசியிலக்கினத்தின்கோனும் பாலகனுமின்கோனு
நிசிதமென்பாபரோடே நின்றிடக்கன்மியாவன்
கசிதருமேழிற்றானே துய்யவாறிரண்டோனென்றோன்
பொசியுறவநேகம்பாவம் பொருந்தியேகன்மியாமே. ௬

பொருந்தியவேழின்கோனும் புண்ணியவாக்கின்கோனு
நெருங்கியபாபராக நேமித்தவிரண்டுபேரு
மிருந்திடவேழிற்றானே யிப்படிப்பிறந்தபேர்கள்
கருங்குழன்மடவார்தங்கள் காமத்தியதிகமாமே. ௭

காமத்தைக்களவிற்சேர்வன் கலந்தபத்துடையோன்வாக்கோன்
றேமொத்தவேழோன்கூடிற் சேர்ந்திடப்பத்தின்மீது
நேமித்தார்மறையோனேழோ னின்றிடவைந்தின்மீது
வாமற்றபாபர்நோக்க மக்களைக்கவனிப்பானே. ௮

மக்கடன்னேழிற்பார்ப்பான் மான்மதிபுருகுநான்குஞ்
சிக்குமேலிவனநேக திரிகளைச்சேர்க்கையாவன்
சுக்கிரன்றேனிற்றேன்றிற் றேகையேபிலவானாகி
விக்கணவநேகமயேரை யிச்சையாய்க்கவனிப்பானே. ௯

இச்சையாய்ப்பிருகுஞ்சேயு மேழினுக்குடையோன்றானு
மச்செனுமைந்துமேழு மமைந்திடவல்லால்வெள்ளி
துச்சிலாமதியுமாறிற் றோன்றிடப்பிறந்தோர்க்கெல்லா
முச்சிதமாகுமபேறு பிள்ளையுமென்னலாமே. ௰

ஒருமூன்றிலேழிராறு லுரைந்திடப்பாவக்கோட்க
டிருவுடைநெடியமாலுஞ் சேய்பிலவீநமாக
வருகளத்திரங்கடன்னை மலடியொன்றுரைப்பர்மற்றுங்
கருதியதிரிவில்லாத கணவனுமாமென்பாரே. ௰௧

கணவனையன்றிவெள்ளிக் கதிரவனிரண்டுகோளு
மணமூறுவேழிலாக மலடிக்குப்புருடனாகு
னனுகலக்கினத்திற்சந்திர னுச்சமாகியாக்க
குணமெலாந்திரிரூபங்கள் கொள்வரிக்குறியுள்ளோரே. ௰௨

கொள்ளுமேழிராசியானுற் குறிப்பதுபுருடராண்கோள்
கள்ளுருவர்க்கமாகிற் களத்திரம்புருடரூபம்
விள்ளுமத்திரத்திலாண்பெண் மேவியகிரகஞ்சாரத்
தெள்ளுறுசமரூபங்கள் சேர்கின்றதிரிகளாமே. ௰௩

சேரவேழிடத்திற்செவ்வாய் சேயினங்கிசங்களேனு
மாரவவ்வீடுசெய்வி டாகினுமலதிலதங்
நேரச்சேயந்தவேழி னீசாத்தமனக்கோணிற்கத்
தூரத்தாள்கணவனில்லா டொழும்பாபர்சோர்வாற்சாவே. ௰௪

சோர்விலாவேழினற்கோ டோன்றிடச்சுபர்கள்பார்க்கச்
சேர்சுபராசியாகத் திரிவருஞ்சொரூபியாகச்
சாருமேழ்பிலவீனத்தாற் சந்திரனிருக்கச்சண்டை
கோதையர்வாய்க்குமிக்கேற் குணமுளதிரிவாய்ப்பாமே. ௰௫

குணவியாமேழில்லவையோன் குறுகிடவுச்சமாட்சி
யனுகிடச்சுபர்கள்பார்க்க லவன்றிரிசாதுவாவா
னுணர்வுறமதியொன்றேழா றிசையவாநீசச்சத்ரு
விணையிலாப்பர்த்தையாவ ளிவன்றிரியென்னலாமே. ௰௬

இவனிலக்கினத்தோனேழா மிடத்தினிற்சுபரோடேகத்
தவனெறிகுலத்திற்பெண்ணு மந்தலக்கினத்தோனேழோன்
புவனியிற்பாபராகிப் பொருந்திடப்பிறந்தபேர்க்குக்
கவனியாயிழிகுலத்தின் காரிகைகைக்குள்ளாமே. ௰௭

கைக்குளாந்திரிகடங்கள் காந்தியின்குணஞ்சொரூப
மெய்க்குளாகிருதியெல்லா மெய்ம்படவுரைக்கவேண்டின்

மைக்குளாம்விழியினாளே வாய்த்திடுங்கோட்கணோக்கு
மிக்கதாங்கிரகத்தாலே விதங்களையறியலாமே. ௧௮

விதங்கொளும்பாபர்மிக்கேல் விதவையாந்திரியாகித்தற்
கிதம்பெராமலடிகட்ட மின்றுவேல்பரத்தைசேயேற்
சதங்கொளுஞ்சண்டியாவள் சாற்றியசனிபிராகுச்
சுதன்றனக்கேழினின்றோன் றூயமங்கிலியாஞ்சொல்லே. ௧௯

பொருபுதனைவலந்திற் புண்ணியர்பிலமாய்நோக்கின்
மருளுமாறுடையோன்கூட வல்லதுநோக்குமாகி
லுருகியகுழவிபெற்றோ ருடலாய்ப்பெருலாளன்லை
பெருகியதிரிகளுண்டாய்ப் பிள்ளையும்பிறாவுக்காமே. ௨௰

பிள்ளையினேழிற்பாபர் பேசியநீசமாகி
விள்ளுவார்திரிசாமென்றேழ் மீனமாய்ச்சனியிருக்கத்
தள்ளுவார்திரிசாவர்கச் சனிசெவ்வாயுடையருசித்
தெள்ளுறுநவாங்கிசங்கள் சேரப்பொன்பரத்தைச்சேய்க்கே. ௨௧

சேயுடனேழிற்செவ்வாய் சேய்சனியிரண்டுபேரு
மாயுறத்திரிபரத்தை யந்தவேழெட்டிற்பாபற்
போயுறப்பன்னிரண்டிற் பொருந்தியசெவ்வாய்நிற்கப்
பேயுமேழுடையோனெட் டீராறிற்பெண்டீர்சாமே. ௨௨

பெண்டிலாவிரண்டிற்பாபர் பெருத்திடப்பெருத்தோரோடே
பண்டையேழுடையோன்கூடிப் பாபரும்பார்க்குமாகிற்
கொண்டிடும்பெண்டீர்மூன்றுங் குறிப்பதிக்கோட்களாலே
தண்டையின்காலினுன்றன் சாதகப்பலனிதாமே. ௨௩

சாதகனேழின்கோட்போய்ச் சார்ந்திடருச்சமாட்சி
யோதுகேந்திரத்திரிகோண முற்றிடப்பார்த்தோன்பார்க்கக்
காதலாலிவனனேகங் களத்திரந்தன்னைச்சேர்வன்
றீதிலாக்களத்திரங்கள் சேருமென்றியம்பலாமே. ௨௪

சேருமேழுடையோன்கேந்திரஞ் சேர்ந்திடசுபர்கள்பார்க்கச்
சோருமென்றுரையாதல்ல சுபர்கடன்ராசியேற
வாருமென்சுபக்கோட்க ளங்கிசமேறுமாகி
னேருறுமனைவியென்றே நிலவரமென்னலாமே. ௨௫

நிலையிலேழுடையோன்மாலு நின்றிடப்பாபரோடே
மலைவுறுநீசச்சத்துரு வர்க்கமாய்வாழ்கின்றாலும்
சிலையுறுபாபர்கூடிற் றீயனேனோக்குமாகிற்
குலையுறுகளத்திற்றங்கள் குலங்களுநாசமாமே. ௨௬

குலமகனேழோனல்ல கோட்களங்கிசங்களேறி
நலனுறுகோட்கணோக்கி னல்லவங்கிசத்திற்பெண்ணுஞ்
சிலைநுதலேழோன்பாபர் சேர்ந்திடத்தீயோர்நோக்கப்
பலனிலாவங்சமேறப் பழித்தவங்கிசத்தாம்பொன்னே. உ௭

பழித்திடாவேழிற்கூட்டிப் பதிந்தவெத்தனைபேருண்டோ
வெளித்திடப்புகரினோடே யிற்பவெத்தனைபேருண்டோ
களிப்பினுலிவரைவெண்ணிக் களத்திரசங்கைசொல்ல
வழுத்தலாங்கோட்களின்னம் வகுப்புவேறென்னலாமே. உ௮

வகுத்திடுமேழினுச்ச மாகவெத்தனைபேருண்டோ
வுகுத்திடும்வெள்ளியோடே புச்சமெத்தனைபேருண்டோ
தொகுத்திடுக்கிரியாமேழோன் சுக்கிரவீடாய்வாக்கி
லகத்தியகோளாய்வெள்ளிக் கணுகுவோரமைத்தவீடே உ௯

அமைத்தவேழுடையோனோடா யமர்ந்தகோட்தன்னிலேனு
மிமைத்தவாக்குடையோனோடே யிருந்தகோட்களிலேயேனு
நமைப்பிலவீடெண்ணி நாசமாதிரிசைச்சொல்லச்
சுமைப்பிலமுடையோரெண்ணிச் சுகத்திரிதுசைசொல்வாயே. ௩௰

துசையிலோர்கிரகமிக்கேற் சுகத்ரியொன்றேயாகுந்
திசையிலக்கினத்தோனேழோன் சேர்புடமொன்றாய்க்கூட்டி
வகையுறுராசிப்பார்ப்பான் வருமெனின்மணர்களாகு
நகைமதிராசிபாபர் நண்ணுமேலிவர்களரிலே, ௩௧

நண்ணியகலியாணங்க ளட்புகரேழோனேழின்
புண்ணியருடனின்றோரேழ் பொருந்தினோர்புகழ்ந்தவர்க்கோ
னெண்ணியவாக்கினின்று னீரைந்தொன்பானின்கோட்கள்
பண்ணியதிசைவிசித்ரம் பாரிற்கல்யாணமாமே. ௩௨

பாரினிற்சகலபேர்க்கும் பாக்கியம்பவிசுதற்கோள்
சேர்திசையாதிமாறத் தீபவர்சுபருங்கூடிற்
சார்வதுசேரும்பின்னோர் தன்றிசைமத்திதன்னிற்
சோர்விலாக்கலியாணங்க டங்குமென்றுரைப்பார்தோகாய். ௩௩

துடங்கலக்கினத்தோனின்ற தூங்நவாங்கிச்த்தோன்ராசி
யடர்ந்துபார்ப்பான்வெண்டிங்கள் ராகுநாள்விவாகமாகு
மிடங்களேழுடையோன்வெள்ளி யிவர்கள்வீராசிதன்னிற்
றடங்கணாய்மறையோன்றிங்கட் சாரிற்கல்யாணந்தானே. ௩௪

சார்கின்றவாக்கில்பாபர் தரித்திடத்திடர்சாவாகும்
பாரென்றறிரிக்கும்வாக்கிற் பாவரெற்பரிபாவம்பாரி

சீர்கொண்டவேழில்வெய்யோன் சேர்ந்திடமலடிசேர்வா
னோர்கின்றமதிபோனிற்கில் னிருத்தஞ்செய்பெண்ணுவாளே. ௩௫
நிருத்தமாஞ்செவ்வாய்புந்தி நிகரில்லாமறையோன்வெள்ளி
தரித்திரச்சநிஇராகு தத்தியகேதுசார்கிற்
பெருத்திடும்விவாகம்வேசை பிராமணத்திரிகட்குவி
துரத்தியுநிராகத்தாள்பின் சேரரையார்தூரத்தாளே. ௩௬
தூரம்போய்வனத்திற்றேய்வான் றாய்வெள்ளிகதிரோனுகில்
வீரத்தான்மதியேநல்ல வீடுசெய்க்கிடிந்தவீடாம்
வாரத்தால்புதனேல்சித்ர வன்னத்தான்மச்சுவீடாந்
தீரத்தான்மரையோனுகிற் றேவராலயங்களாமே ௩௭
தேவனும்புகரேழாகிற் சிலம்பொருந்தியதிற்சேர்வான்
கேவருசநியோன்மைந்தன் கிரீடைபாழ்மடங்களாகுந்
தாவியபரம்போல்விஷ்ணு தலம்சிவதலங்களாகும்
பரவியசுபரேஸிந்தம் படிதலம்பகர்வர்மாதே. ௩௮
படிமகனுனசேயே வதிந்திடப்பதியில்வெள்ளி
யடிபினங்கிசங்களேற வைந்துமேழுடையோனுகத்
துடிபிடையார்சொற்கேட்பான் சொற்றிருவெய்யகோளாங்
கொடிதுகள்பிலன்கள்சாவு கூறலாங்குணங்கொண்மாதே. ௩௯
கூறுமேழுடையோன்வெள்ளி கொடிதிலாச்சுபர்களாக
மீறியபிலவானுக மிக்கவேழிடத்தேநிற்க
நீறியபாபர்கூட நின்றியபாபர்நோக்க
சீறியகுழவிக்கான சிறியனுமரணமாமே. ௪0
திரிதருமேழிற்கெட்டோன் றிசையபகாரந்தன்னின்
மரிபடும்வெள்ளினட்ட வர்க்கங்கூடியராசிக்குங்
கருவியசநிவந்தக்கால் களத்திரமரணமாகுங்
குறியதுதப்பாதென்றூர் கோதறவுணர்ந்தமேலோர். ௪௧
கோதாவேழோன்பாரி சாதகவர்க்கங்கூட
வேதியன்சேரநோக்க மென்சுபராசியாகச்
சாதகன்றயிர்நெய்பாற்றேன் றருபழம்பருப்போடுண்டு
பூதலந்தனிலூகத்தாற் போகபோக்கியமுமாமே. ௪௨
போகஞ்செய்யேழோனேடே புகருற்புகரேழாக
வேகமாய்நோக்கியேழா மிடம்புகர்வீடதாகத்
தோகையர்நிதம்பந்தன்னைச் சும்பனஞ்செய்வன்பின்னுந்
தாகஞ்செய்வர்க்கோனேடேற் சார்ந்தவிப்பலங்கடானே. ௪௩

சரியிலாப்பத்தின்கோளுந் தங்கியபுகருமாகப்
பரிவினேழினிற்கப் பாலகன்பிறக்குமாகிற்
சுரிகுழன்மடவார்தன்னைச் சும்பனஞ்செய்வனென்பர்
தெரிவுறுமறைவல்லோர்கள் செப்பியபலனிதாமே. சச

செப்பியவேழோனேனுஞ் சிரந்திடும்புகரோனேனுந்
தப்பியேபார்ப்பானேனுந் தம்பகத்திரிலயச்சார்வன்
வைப்பிலேழுடையோனேழில் வாடிமேலிச்சையாவ
னிப்படிமதியேன்மோகி யென்பர்சம்பத்தினுட்கே. சரு

என்பவனேழின்கேட்போ யிருந்திடச்செலராசிக்கு
ளன்புறுபுகரோனேனு மமர்ந்திடச்செலராசிக்கு
மின்பெறுதீர்க்கரூப மிகுபகைதகைசயுளாளர்
முன்புகரேழோனேக்க மோகநீர்மிதம்பத்தாட்கே. சசு

மோகமாமேழிற்பாவர் மொய்த்திடப்பாபர்நோக்கிற்
போகமேசெய்யவேண்டாள் புருடனையிகழ்ச்சியாக
மேகநீர்மிதம்பத்தில்லாள் விறுவிறுப்புடையார்பேரிற்
ருகமாயிச்சையாவள் றருபலமெல்லாஞ்சாற்றே. சஎ

ஏழாம்பாவம்-முற்றிற்று.

## எட்டாம்பாவம்.

தருபறனெட்டினாலே சார்வதையுரைக்கவேண்டிற்
கருகியவாயுளோடே கருதியவரிட்டந்தானும்
பெருகியரெணங்கள்சார்வு பிழைகளுமெட்டின்கோளான்
மருவலர்குழலினாளே வருபலனறியலாமே. க

அறிவினாலெட்டின்கோட்போ யமையதுபனிரண்டேனு
நெறியினாலாறினேனு நின்றிடப்பாபரோடே
செறிவிலாவற்பவாயுள் சேர்ந்திலக்கினத்தானோடே
மறிபடப்பனிரண்டாறின் மகவுக்கற்பாயுவாமே. உ

மகவினுக்கெட்டோனெட்டோன் மதலைக்குதீர்க்கவாயுள்
சகவிலக்கினத்தோனோடே தோன்றிடவெட்டின்கோளு
முகவிலாவாறின்கோளு மூவருமொன்றாய்க்கூடிப்
புகுவதுபனிரண்டாகிற் புதல்வன்றீர்க்காயுளாமே. ௩

புதல்வன்றன்மத்தின்கோளும் பொருந்துலக்கினத்தின்கோளு
மிதமுடையெட்டின்கோளு மிருக்கக்கெந்திரத்திரிகோண
மதலைக்குத்தீர்க்கவாயு ளவர்பிலவினமாக
நிதியிலாச்சரியுந்தீதே னிலவாமற்பவாயுள் ௪

நிலைவரம்பத்தோனெட்டோ னிலக்கினத் துடையோன்மிக்கோன்
மலைவிலாத்தீர்த்தவாயுண் மத்திபமிரண்டுமிக்கேற்
பிலையொன்றேயெண்ணுங்காகும் பிலவினர்மூன் றுமாகி
விலையென்றார்வயதுமெத்த வீராறுக்குண்டொன்பாரே. ௫

ஈரமிலெட்டோன்பாப ரிராசியிற்பாபரோடோர்
சார்வதாறெட்டீராறேற் சாதகனற்பவாயுள்
சோர்வட்டமனதிற்கோளாய்ச் சுபர்வீட்டிற்சுபர்களோடே
சேரவிக்குழவிக்கெல்லாந் தீர்க்காயுளென்னலாமே. ௬

தீர்க்கலக்கினத்தோனெட் டீராறிற்சேரவல்லா
லார்க்குமட்டமத்தோனேனு மாறெட்டுபன்னிரண்டாகப்
பார்க்குங்கோள்பாபராகப் பாபர்கள்கூடவல்லாற்
கூர்க்கத்தமனநீசங்கள் கொடியவீடற்பவாயுள். ௭

கொடியிலாவிலக்கினக்கோன் கோதிலாவட்டமத்தோ
னெடியவுச்சங்களாக நிற்கவல்லதுநிற்போர்க
டுடியினர்கேந்திரகோணந் தோன்றியேநிற்கின்றாலும்
வடியினிற்றீர்க்கவாயுள் பலனிவர்க்கென்னலாமே ௮

என்னபன்னிரண்டோன்பன்னி ரண்டினின்மிகத்தீர்க்காயுள்
பின்னிலக்கினத்தோனெட்டோன் பிலன்செய்கேந்திரத்திற்காயிற்
றுன்னியொன்பதுமூவாண்டி லுறைந்திடச்சுபர்கள்பார்க்கச்
சொன்னமென்சரீராரோக்யந் தோனுறுதீர்க்காயுட்டானே. ௯

தோன்றிடவட்டமத்தோன் சுவரவாறெட்டீராறி
லூன்றிடத்திசைவிசித்ர முற்றநாண்மரணமாவான்
மேன்றகுசநிபோய்நின்ற வீட்டுக்கோட்டிசையிறெட்டோன்
போன்றிடுமபகாரத்திற் புதல்வர்க்குமரணமாமே. ௰

புதல்வர்க்குமரணமெட்டோன் புரிதிசையபகாரத்திற்
கதலித்ங்கெட்டோனோடே கலந்தகோடிசையிலேனு
மிதமித்தவிண்டுபேரி லெவர்பிலவினத்தாரோ
பதறிச்செய்திசைவிசித்ர மிவனுக்குமரணமாமே. ௧௧

பாலசனேந்தினிற்கோட் பதியவாறெட்டீராறிற்
கோவியராகுசேது கூடுமேற்றிசையிற்கொல்லுஞ்
சாலலக்கினத்தோனெட்டோன் தன்னுடன்கூடிநின்றான்
மேலுமத்திசைவிசித்ர மிவனுக்குமரணமாமே. ௧௨

இவனுக்கெட்டுடையகோட்போ யிருந்திடலக்கோளேனுங்
கவனித்துச்சொன்னகோட்போய்க் கலந்தராசிக்கோளேனும்

புவனிக்குளிவர்களுக்கிற் பொருந்திசையபகாரத்திற்
றவனித்துமரணமாவன் றையலேயிவனென்பாரே. ௧௩

றையலேபத்தோனெட்டோன் றனித்தலக்கினத்தோன்காரி
மெய்யரிந்நான் குபேரில் வெகுபிலவீனமாரோ
கொய்யுமக்கோளைநோக்கிச் சூழ்திசையபகாரத்தி
வையகந்தனிலேபெற்ற மதலேசாவாகுமாதே. ௧௪

மதலேயெட்டுடையோனெட்டேல் வருதிசையபகாரத்தி
லுதவியசரீரவாதை யுண்டென்பருண்மையெட்டோ
னதிதிசையபகாரத்தி லகமிகவருத்துமென்பார்
பதிவதுபிலமேவாதை பயனிலாவிவர்த்தியாமே ௧௫

பயின்றிருள்சென்மராசிப் பதிபிலவீனமாகி
வியன்றிலக்கினத்தோனெட்டோ னிவர்திசைகேட்டகால
முயன்றலக்கினத்தோனெட்டோன் முழுபிலவான்களானு
னயன்றராதிசைகள்போனு னன்மைகள்பின்னுண்டாமே. ௧௬

நன்மைலக்கினத்திறைனு நாடியவெட்டின்கோளுந்
தின்மையில்லாதமிக்காய்ச் சொட்சகேந்திரத்திரிகோணந்
துன்மையாயிவரைச்சேர்ந்தோர் சூழ்திசையபகார்த்திற்
றன்மையில்ரோகஞ்சாருந் தரும்பலவாதந்தானே ௧௭

தருமலக்கினத்தோனெட்டோன் சாரகெந்திரத்திரிகோண
மிருவருமல்லாலெட்டி லிருந்தவர்திசையிலேனும்
வருமபகாரத்தேனு மரணங்கடிட்டமாகுந்
திருவருளுடையமேலோர் செப்பியபலனிதாமே. ௧௮

செப்பியவெட்டின்கோட்போய்ச் சேரலக்கினத்தின்மீது
மெப்பிலாச்சநிபோய்லக்க மேனிடமேவுவோர்க
ளொப்பியதிசையிலேனு முறும்பகாரத்தேனுந்
தப்பிதமில்லைமாதே சாவதுதிட்டமாமே. ௧௯

சாவதாமெட்டோனோடுந் தனித்தலக்கினத்தோனோடு
மேவியகிரகத்தாறில் வெகுபிலவீனமென்பர்
போவதாந்திசையிலேனும் புரியபகாரத்தேனு
மோவிரமனையமாதே யுயிர்வதையாமென்பாரே. ௨௰

உயிர்தருமைந்தனோடே யுற்றிடுங்கிரகத்தாறில்
வெயிலவன்றன்னைநீக்கி மிக்ககோட்டிசைவிசித்ரந்
தயிரியவான்மென்ற சாதகன்மரணமாவான்
மயிலியற்றாயைப்போன்ற வளுசியின்கொம்பனாளே. ௨௧

வஞ்சியேனையந்தோனோடே வாழுங்கோட்டிசையிலேனு
மிஞ்சிலக்கினத்தினோடே மேவுங்கோட்டிசையிலேனுங்
கொஞ்சியவபகாரத்திற் குறித்ததிங்களுக்குமுன்னே
னொஞ்சியவங்கவீக முறுமெனவுரைக்கலாமே. உஉ

உறுபிதிர்த்தானமாங்கே வுற்றலக்கினத்தினும்
பெறுவரேற்கெந்திரகோணம் பிரிதிசையபகாரத்தின்
மறுகியகோபத்தாலே வருமனுமரணமென்ப
ரிறுதியிற்காலந்தேர்ந்தா ரியம்பியபலனிதாமே. உ௩

இயம்பியசெவ்வாய்காரி யிரணியனிராகுவிந்து
நயம்பிடாதிவர்களெட்டி லன்னுமேன்மரணந்தத்திற்
பயன்படவறிபார்மையல் பயித்தியங்கொண்டுசாவர்
முயங்கியதிசையிற்சாரு முல்லைமென்னகையினாளே. உ௪

முல்லைமென்னகைபாவிந்து மோசித்துவாக்கிலாக
வல்லனுவெட்டிலாக வாணகோர்புதனுஞ்சேயுஞ்
சொல்லியபத்தினாலாற் றூர்க்கந்தனாற்றமாவன்
வில்லெனுநாதனினுளே விதிவழிப்பலனிதாமே. உ௫

விதியெனுமெட்டிற்பாபர் மேவிடப்பாபர்நோக்கக்
குதிகொளுந்தீர்க்கரோய்கள் கோதையேயின்னுமங்கப்
பதியெனுமெட்டினிற்கோள் பதியதில்லோர்கள்பார்க்கி
லதிகவான்வெட்டாலாகு மவர்நிலமமைத்தவாறே. உ௬

எட்டாம்பாவம்-முற்றிற்று.

## ஒன்பதாம்பாவம்.

அமைத்தவொன்பதிற்சொல்ல வானபாக்யங்களாகான்
சமைத்தபொன்றிரவியங்க டக்கைதன்றவசினோடு
விமைந்திடுஞ்சுகங்களெல்லா மியம்பிலாமென்பதாகு
நமைப்பிலாமறையோனுனு நாடியபலன்சொல்வாமே. க

நாடியவொன்பதாங்கோ ணண்ணியமறையோன்றானு
நீடியசுபவர்க்கங்க ணின்றவொன்பதினின்றேனுங்
கேடிலாச்சுபர்களானுற் கிட்டுமேபாக்கியங்க
ளோடியதிசையினாலே யுறுமெனவுரைக்கலாமே. உ

உரைத்தவொன்பதிலேபாவ ருறைபடசநீங்களாக
நிரைத்தவத்தமனமாக நின்றிடத்தர்மஞ்செய்யார்
தரித்தவொன்பதிலேபாபர் சார்ந்திடமுச்சமாட்சி
துரைத்ததோர்பாக்கியங்கள சொல்லலாம்வெகுநாளைக்கே. ௩

சொல்லுமொன்பதிலேநின்றோன் றோன்றியபத்தின்கோனு
மெல்லவுச்சாட்சியங்க மேறியேயிருக்கின்றானு
மொல்லையந்திலக்கினத்தா னுச்சாட்சியங்கமாக
நல்லதுராசயோக நால்வருமிக்கோனன்றே. ௪

நன்றோன்பானொன்பதாக நலனுறநோக்கினின்று
லொன்றோன்பானிடத்திற்பாப ருறைந்திடப்பிருகுங்கூட
வன்றோன்பான்மதியோன்கூடி லவன்குருத்திரிசம்போகி
நின்றோன்பான்மறையோன்பார்க்கி னிசம்ராசபுத்திரியாமே ௫

நிகரோன்பான்செவ்வாய்நோக்க நிலங்கள்சேத்திரங்களுண்டாம்
பகரொன்பான்புந்திநோக்கப் பாக்கியமிகுதியாகும்
புகரொன்பானோக்கமாகிற் புரவிகட்கிசமானவ
னகரொன்பானிந்துநோக்க நன்றியல்சுகவானாமே. ௬

நன்றியல்சனிபோயென்பான் ராசியைநோக்குமாகி
லொன்றியமதலைவாழி னுதடுகள்பருத்துக்கானு
மென்றவத்தலத்தைவெய்யோ னிறைபவன்றிங்களோக்கக்
கன்றுகள்பசுக்கள்வாசிக் கனகங்கள்வித்தையாமே. ௭

சனகனுங்கதிருஞ்சேயுங் கருதியொன்பதனைநோக்க
வினையவன்சேனைகாப்ப னென்றாழ்வாகனமுமுண்டாம்
புனையுமாற்றனங்கள்சேரும் புதனொடுவத்தநோக்கி
லனையவன்விநோதவித்தை யாக்கமாம்வில்தவித்தாலே. ௮

ஆக்கியமறையோன்வெள்ளி யாதித்தன்மூன்றுபேரு
நோக்கவொன்பதனைவித்தை லோகத்திலதிகமாகும்
தேக்கியசனியாதித்தன் செய்யவொன்பதனைநோக்கப்
பாக்கியங்குணங்களல்ல மதிபுத்தியவன்பண்பாமே ௯

பண்படுதலமொன்பானைப் பணிபதிமறையோன்செவ்வாய்
திண்படநோக்கிற்சேனைத் திரன்சுகந்திரியநேக
நண்புறமதியுமாலும் ராசியொன்பதனைநோக்கிற்
கண்பெறுதிரியும்வீடுங் கட்டின்மெத்தைகளுமாமே ௰

அன்னியதலமொன்பானை யந்தணன்பிருகுமாலு
மூன்றுமேலதிகவித்தை யொக்குமெல்லாருநோக்கின்
கன்னனாய்த்தனவானாகு மைந்திடச்சுபர்கள்வேந்தா
லின்னதெல்லாருஞ்சாமி யிவனுக்கொப்பில்லையம்மா. ௧௧

ஒப்பிலொன்பதிலதிங்க ளுறைந்திடப்புந்திசாரி
பொற்புறநோக்குமாகிற் பூமதியாவதென்ப

வப்பியுச்சாட்சியங்கோ ளமைந்திடச்சுபர்களுக்கச்
செப்பியவேந்தனவன் றேசத்துக்கென்னலாமே. ௧௨

தேசத்துக்கதிர்வெண்டிங்கள் சேர்ந்தொன்பதினிலேநிற்கப்
பூசிதபாக்யவானும் பொருந்தியபண்ணுக்காடா
நேசித்தசேயேற்றுக்க நிற்கச்சேய்கதிரோன்கூடிப்
பாசித்தசகராசர்க்குப் பற்றியபிரியனாமே ௧௩

பற்றியகதிர்வெண்டிங்கள் பாலகர்க்கொன்பதாகச்
சித்தியாமேழிலேயுஞ் சேர்வதுவெகுகோளாகி
னித்தியதுக்கியாவ னிற்பதுமறையோன்கூடி
னத்தியதந்தைசொற்கீழ் நடந்திடும்பொருளுமாமே. ௧௪

நடந்திடுங்கதிர்வெண்டிங்க ணண்ணியசேயொன்பானேற்
கடந்துபோய்தந்தைதாயார் கதிர்மதிபுதன்வியாழ
முடந்தையேல்வானப்பேரோ டிக்கனுவானுமாவான்
றிடம்படுந்திசைகளாலே செப்பியபலன்சேர்வானே. ௧௫

வானுறுபுகர்வெண்டிங்கள் மற்றவாதித்தன்கூடி
தானமொன்பதிலேநிற்கச் சண்டையான்றிரியினோடே
போனவொன்பதிலாதித்தன் புகழ்சநிபிருந்ததானு
னீனவெள்ளாட்டியால்போக கிலியவிரோதியாமே. ௧௬

இகலியகதிர்சேய்புந்தி யிவர்களொன்பதிலேநின்றுன்
மகவினைச்சுகவானென்பார் மன்றயவனென்பதாகிற்
செகமதிலிவன்றந்தைக்குத் தீர்க்கவாஞ்சையனுமாவன்
சகலமாம்விரைவித்துக்க டங்கரிப்பானுமாமே. ௧௭

தங்கியகதிர்சேய்வெள்ளி சார்வதொன்பதிலேயாகில்
வெங்கடுங்கோபியாக விகாதத்தாற்பிரியனாவான்
மங்கையையடிப்பான்பொல்லா வஞ்சநியொன்பதாகி
லிங்கிவன்றந்தையல்லா னியல்வேந்துக்கேர்த்திடானே. ௧௮

எதிர்த்தவாதித்தன்புந்தி யிறையவனென்பதாகிற்
கார்த்தாசாக்களுக்குங் கனகமுமிகுதியாகுங்
கூர்த்தவெஞ்சநியொன்பானேற் கொடியபாதகனுமாகி
யூர்த்தைகளிடத்திற்சாவான் சுகமில்லையென்னலாமே. ௧௯

சுகந்தருங்குருவாதித்தன் சுக்கிரனென்பதாகிற்
செகந்தனிற்பரத்தைதோயுஞ் சிறந்தபண்டிதனுமாவான்
மகிழ்ந்திடும்பொருளுமுண்டா மணிகதிர்சநிவியாழம்
புகுந்தவரொன்பதாகிற் பொருங்கல்விக்காரனாமே. ௨௰

பொருதெழுங்கதிரோன்வெள்ளி பொருந்தியொன்பதிலேநின்ற
செருவுறுவேந்தராலே தெண்டனைப்படுவன்றீர்க்கன்
றருமதிசெவ்வாய்புத்தி சார்வதொன்பதிலேயானுன்
மருமலர்க்குழலினளே பனநுசஞ்சலத்தனாமே. உக

மனத்தருமதியுஞ்சேயு மறையவனொன்பதாகிற்
றினங்களுந்தொழுவான்றேவைச் சேய்பிருகிந்துவாகிற்
கனங்குழல்திரிசாவாகுங் கடுஞ்சனிமதிசெவ்வாயேற்
றனங்களையழித்துப்போற்ற தாயார்குத்திரத்தாற்சாமே. உஉ

தாயெனுங்குருச்சொல்லாலுஞ் சாதகனொன்பதாகிற்
சேய்தனைத்தனவானசா ரியனெனச்செப்பலாகுந்
தூய்மதிவெள்ளிபுந்தி தோய்குவதொன்பதாகி
லாயவன்றந்தையாலுற் றிரண்டுதாரங்களாமே. உந

இரண்டருமதியுமாலு மியற்சனியொன்பதாகின்
முரண்டரும்பாவியாகு முழுவிகாதத்தனாகுந்
திரண்டெழுமறையோன்வெள்ளி செழுமதியொன்பதாகிற்
புரண்டெழுங்குழலிவேந்தாய்ப் பூமியைப்புரக்குமாதே. உச

பூமியிற்கதிரோன்காரி பொருந்தியொன்பதிலேநின்று
னேமமுநிட்டையாக நித்தியகருமஞ்செய்வ
னமவெஞ்சனிமால்வெள்ளி நண்ணியவொன்பதாகிற்
கோமகன்றனக்குநேராய்க் குறித்திடும்விதையித்தாமே. உரு

குறித்தபொன்செவ்வாயிந்து கூடியொன்பதிலேநின்று
னெறித்தசாத்திரிகனுவ னின்றிடமறையோன்மாலும்
பிறித்திடுஞ்சொல்லினாலே பேர்படவித்துவானு
யறிக்கையுந்தனமுமிக்க வானவாசிரியனாமே. உசா

ஆனபொன்புகர்மாலிந்து வாகவின்நான்குபெருந்
தானமென்பதிலேநின்றுற் றர்ம்மராசாவேயென்பா
ருனமில்கதிர்செவ்வாய்பொன் னொடுசனியென்பதாகிற்
சேனைசாகசங்கள்செய்வன் றிரவியவானுமாமே. உஎ

திரளுமொன்பதிலேவெள்ளி சேயிந்துமறையோன்சேரிற்
றரணியிற்குணங்கண்மிக்காஞ் சாருங்காளாறைந்தேனும்
பூரளுமொவபதினொன்கேனும் பொருந்துவோர்மூன்றினலு
நரருலகாளும்வேந்தாய் நன்மைகள்பலனுமாமே, உஅ

நன்மையாம்புதன்வியாழ னாருக்கோன்பதிலேலிற்கத்
தின்மையில்லாதபாக்கியஞ் சேருமோன்பதிற்சேர்வாகில்
வன்மையின்மறையோன்மாலு மருவநோக்கில்லையாகிற்
றுன்மையில்வியாதிபொல்லாத் துர்க்குணவானுமாமே. ௨௯

துர்க்குணப்பட்டோன்பான்கோட் டோன்றவாறெட்டீராறிற்
சத்துருநீசர்பார்க்கத் தான்கொடுரோகமேறத்
தெத்தியநீசராகிற் சேர்ந்திடப்பிறந்தபேர்க்கு
மூத்தியபாக்கியங்கள் முழுதுநாசங்களாமே. ௩௰

முழுதுமவ்வொன்பானேடே மோகமாஞ்சுபர்கள்கூடப்
பழுதிலாச்சுபர்கள்பார்க்கப் பாலகனென்பான்ராசி
தொழுதியாய்ச்சுபர்கணிற்கச் சோர்விலாச்சுபருநோக்கிற்
றழுவியமதலைக்கெல்லாஞ் சகலபாக்கியமுண்டாமே. ௩௧

சகலருமொன்பான்சிங்கா சனமெனுமங்சமேறப்
பகரிலக்கினத்தோனேனும் பத்தின்கோளேனும்பார்க்க
மிகுதியாய்த்தானஞ்செய்வான் வெகுதிரவியமுஞ்சேரு
மகவிடக்கீர்த்திபாரில் வருக்கரிதென்னலாமே ௩௨

வகுத்திடுமொன்பான்கோனு மன்னுமகோபுராங்சமேறப்
பகுத்தலக்கினத்தின்கோனும் பத்துடைகோனும்பார்க்கத்
தொகுத்தவந்தணனுமாவன் சொற்புரோகிதனுமாவன்
மிகுததானங்கட்கெல்லா மிவனதிகாரியாமே. ௩௩

அதிகவொன்பதிலேலிற்க வந்தணனைமைந்தராசிப்
பதினவாங்கிசத்தின்கோனைப் பார்ப்பதுசுகர்களாகி
விதமொடுதங்ஙதயாசா னிவர்களைப்பத்திசெய்வான்
புதுமதிநூலினுளே பொருந்துமெசல்வத்தனுமே. ௩௪

பொருந்திடச்சுபரொன்பானிற் பொன்னுடன்வாக்குமாகத்
திருந்தியவொன்பாதங்கோள் சேர்ந்திடப்பொன்னவாங்ச
மருந்தவஞ்செய்யுமாசா னடியினைப்பத்தியாவன்
கருக்குழன்மாதேகேளாய் கனபவிசவனுக்காமே. ௩௫

கனகன்மால்வெள்ளிமூவர் கருதியொன்பதிலேலிற்க
வினையதையொன்பானுக்க விவர்சுபர்மத்தியாக
வினையவன்றர்ம்மவானு மதிகபாக்கியமுஞ்சேரும்
புனைமயிலினையமாதே புண்ணியவிதியானுமே. ௩௬

வித்திடுங்கோட்களெல்லா மேவியொன்பதிலேநிற்கக்
கதித்திடுஞ்செல்வக்கோனுங் கதிரோடொன்பானிற்கோனு
முதித்திடவாவெட்டீரா றுப்பிலாக்கோடியோர்நோக்கிற்
கெதிக்கிவன்றந்தையந்தின் கிடைப்பதாகாதென்பாரே. ௧௭

கிடைப்பதாங்கதிரோனென்பான் கேந்திரகோணங்களாகப்
படைப்பதாமைந்தொன்பானிற் பதிவதுசுபர்களாகத்
தடுத்திடாச்சுபர்கணோக்கிற் றகப்பனந்தியத்திற்சாவா
மொடுக்கனுட்கிடைக்குமென்ப தன்மையென்றுரைக்கலாமே. ௧௮

உரைக்குமேல்வெள்ளியிந்து முற்றநான்குடையகோட்போய்
நிரைக்கவாறெட்டீராறி னிசிபிலேமரணந்தந்தை
புரைக்குமைந்துடையோனென்பான் போககேந்திரத்திரிகோணந்
தரச்சுபர்கூடநோக்கத் தந்தைக்கும்பகற்சாவாமே. ௧௯

தந்தையொன்பதின்கோன்மிக்காய்ச் சார்வதுஞ்சுபர்வீடாகிற்
சிந்தையாற்சுபருநோக்கச் செபதபத்தியானியாவ
னிந்தனைசெய்வோன்றேவை நெறிநிலைதவமுமாகுஞ்
சந்தயமன்றிமேலாந் தவங்களையிவன்சார்வானே. ௨௰

ஒன்பதாம்பாவம்-முற்றிற்று.

—:*:—

## பத்தாம்பாவம்.

வெகுபிலன்றரும்பத்தாலே விதிக்கறுவித்தைஞான
கிருதியாபாரமார்க்க கித்திரைநெறிசேர்கீர்த்தி
புகுதுமாக்கினைகள்கர்மம் பூடணம்புவிவேளாண்மை
தகுந்தவிமானமெல்லாஞ் சாதகர்க்கியம்பலாமே. ௧

சாதகர்க்குரைத்தபத்தோன் சவிபுதன்மறையோனோடே
யாதவனவர்களாலு மமைந்திடும்பத்தினாலுந்
தீதகவுணர்ந்துபோன சென்மத்தின்பலனுஞ்செப்பிச்
சோதனைக்குச்சென்மத்தின் சுகபலன்சொல்லலாமே. ௨

சொல்லுதற்கரியபத்தோன் றாய்பலவீனமாகு
லல்லல்செய்மனத்தனாகி யதிதுராசாரஞ்செய்வன்
வெல்புதன்புகர்வியாழம் வெபிலவள்பிலவீனத்தாற்
செல்லதாறெட்டீராறிற் றீதுகன்மஞ்செய்வானே. ௩

தீதெனும்பாவாதித்தன் சேர்வதுபத்திலாகிற்
சாதகன்கெங்கைக்கேகுந் தனக்குப்பத்தாமிராசி

கோதிலாவினமாகக் குளிர்மதியிருக்குமாகின்
மேதினிகடந்தபோது வெகுமோச மடைவதாமே. ச

வெகுபத்தோன்வெள்ளியோடே மேவியுச்சங்களாகப்
புகுதற்றகெந்திரமாகிற் போவதுகங்காஸ்நானம்
மிகுதற்றபுதனீராறின் மேலவீராறேனுச்ச
மகுதற்றபுதனை நோக்கி னறங்களல்லதுசெய்வானே. ரு

அறந்தரும்பத்திலேவா னடர்முழுமதியதாகப்
பிறந்தவன்கெங்கைக்கேகும் பிலன்களாய்ப்பாபர்நின்றாற்
சிறந்தசாகரங்கள்செய்வான் சேர்வதுசுபராய்ப்பக்தி
னறும்பிலயீனமான னல்லக்கன்மஞ்செய்வானே. சு

நல்லயத்துடையோன்யுந்தி நான்மறையோன்மிக்கோனுய்ச்
சொல்லயாகாதிகன்மந் தோன்றிலக்கினத்தோன்பத்தோ
னில்லுறக்கூடத்தாங்க ளேகாதிபத்தியமாகிற்
செல்லுதற்கிவன்கைப்பொன்னாற் செய்வதியாகமாமே. எ

செய்கதிர்லக்கினத்தோன் சிறந்தபத்துடையோன்கூடி
லையமின்சூத்ரர்பொன்னை யளித்தியாகங்கள்செய்வேன்
கொய்யுமவ்வரவுங்கூடிற் குத்ரமந்திரங்களாலே
மெய்யெனப்பொருளைத்தேடி மிக்கயாகஞ்செய்வானே. அ

மிக்கதாய்முன்னேசேரில் வேதியன்கூடிநின்றா
லிக்கணம்வேந்தர்பொன்னை லிவணியாகங்கள்செய்வன்
பக்கபத்துடையோனேழோன் றன்னுடன்கூடிநின்றான்
மைக்கருங்குழலார்பொன்னை வழங்கியாகஞ்செய்வானே. கூ

வழங்கியவெள்ளிபுந்தி மன்னியராசிக்கோட்கள்
விளங்கியித்தலத்தைநோக்க வெகுதிரவியங்கடேடி
யிளந்தையாமதலைவாச மேமனுமியாகஞ்செய்வன்
களங்கெனும்பிலவினத்திற் கன்மநாட்டங்களாமே. ய

கன்மஞ்சேர்மதிக்குப்பத்திற் கருதியேசுபர்மிக்காக
நன்மையாமுச்சவர்க்க நண்ணிடமறையோன்கூடத்
தன்மையாய்மறையோன்பார்க்கத் துயரிலாகீர்த்திமானுய்ச்
சென்மனார்மதலையாகஞ் செய்யவல்லவன்றன்வாக்கே. கக

வாக்கியபத்தின்கோட்போய் வந்தருஞ்சநியைச்சேர
நோக்கியட்டமத்தோன்பார்க்க துண்கொரோங்சமேறப்

போக்கில்க்கிகமேசேரிற் புதல்வனையதிகொடூர
நீக்கியவாக்கினைக்கே நின்றுடல்பதைக்குமாதே. க௨

நின்றகர்க்கடகாசி நிலவுறமிலாவைபந்த
நன்றியமரையோன்வெள்ளி நயம்பிடநோக்குமாகில்
வென்றியமதிபாராவ தாங்கிசமேறின்மீதாம்
பொன்றிடாக்கீர்த்திவாலும் பொருளுமிக்காகுமாதே. க௩

பொருடரும்பத்தினுன்போய்ப் புண்ணியருடனேகூட
வருடருஞ்சுபர்கண்மத்தி யாயினுமாகவல்லாற்
றெருளுநற்சுபக்கோளங்கீஞ் சேர்ந்திருந்தாலுஞ்சேயை
யுருகியவபிமானத்துக் குடையனுமென்பர்பாரே. க௪

உடையதாம்பத்திற்பாப ருரைந்திடப்பாபர்நோக்க
மிடையிறைப்பத்தினு மிகுபிலவீனமாகி
லடைவதாமந்தவார்த்தை யகற்றியகாமத்தானும்
புடைதருங்காந்திகீர்த்தி போய்விடும்பூவின்மாதே. க௫

பத்தாம்பாவம்-முற்றிற்று.

---

# பதினோரும்பாவம்.

பத்தினிற்பலன்பாபாரஞ் சீவனம்பதிந்தகீர்த்தி
வித்தையாக்கினைவேளாண்மை மிகுந்தயாகஞ்ஞானங்க
ணித்தைதனைபூடணவிமான நீதியாய்நிதியோடெல்லாம்
பெற்றவன்கதிர்மானீலன் குருவையும்பேணிப்பாரே. க

முந்தினசெனனச்செய்தி மொழிவதும்பற்றிப்பார்க்க
வந்திடுங்கன்மக்கோடான் வருபிலவீனமாகச்
சிந்தைசஞ்சலவானுகுஞ் செய்தொழிற்றுராசாரங்கள்
சொந்தமாயவனிடத்திற் றோன்றிடும்வகையைச்சொல்லே. ௨

குருபுகர்கதிர்மாலின்னோர் குணபிலவீனமாக
வொருபனிரண்டிலாறி லெட்டினிலாறிநின்றுல்
வருவதுபொல்லாக்கன்மம் வணங்குவன்பத்தில்ராகு
வெரிகதிர்கூடிக்காசி யாத்திரையிவனேபோவான். ௩

மீனமாய்த்தானம்பத்தாய் விளங்கிடுமதியாய்மோட்சந்
தானவனங்கனேடு கூடிசொட்சேத்ரஞ்சார்ந்து

வானகேந்திரத்திலேற வன்கங்காஸ்நாநமாடப்
போனவனென்றுதானே பூமியிற்போற்றுவாரே. ௪

வியனிலாமாலயந்த வியபதியுச்சமாகி
நயமுடன்புதனைப்பார்க்க நல்லபுண்ணியங்கள்செய்வன்
றயையொடுபத்திற்பூர்ணச் சந்திரனிருந்துவாழ்ந்தா
லயனிடவதிகாரத்தா லடவிகாசிக்கேபோவான். ௫

பாவ கள்பிலர்களாகப் பத்தினிற்சாகசங்கள்
சிவர்கள்பலவிருங்க டிருந்தனற்கருமஞ்செய்யான்
கோவமின்பத்தின்கோடான் குருபுதனிவரைக்கொண்டே
யாவதேயாககன்ம மழிக்கச்சிந்திக்கலாமே ௬

பத்தினிற்குடையோர்லக்ந நாதனும்பதிக்கேகாதிப்
பத்தியமாகத்தானே பணமுண்டாய்பண்ணும்யாக
மெத்தகன்மத்தோன்லக்ந நாதனுமெழிலான்வெய்யோன்
முத்தவேளாளன்பொன்று வியாகங்கண்முடிப்பனென்னே. ௭

பத்திரமாகவிற்கோள் பதிந்திடவாலிதீண்டக்
குத்திரத்தேழின்பொன்றற் கொண்டவனியாகம்பண்ணு
னுத்தமவியாழங்கூடி னுயர்ந்தராசாக்கள்கையான்
மெத்தவுந்திரவியங்கள் வேண்டியயாகம்வேட்பன். ௮

பத்தினுக்குடையோனேழிற் பதியனுமொன்றாய்க்கூடிற்
சொற்பிரிதிரவியங்கள் சுகமொடுயாகந்துய்ப்பன்
வித்தகன்புத்திசங்கன் விளங்கியராசிக்கன்றே
னொத்துடனொக்கயாக முண்டெனுமவர்க்குத்தானே. ௯

சந்திரன்றனக்குப்பத்தா மிடத்தினிற்சுபரேசார
வந்தியவுச்சவர்க்க முண்டெனவியாழங்கூடச்
சிந்தையால்வியாழம்பார்க்கச் செய்பவன்யாகமெல்லாம்
வந்தவனென்னுங்கீர்த்தி வழங்கிடுமகிமையாலும் ௰

புதன்குருசுக்கனிந்தப் புண்ணியமிருக்கும்ராசிக்
கதிபனெட்டீராரேழி லமைந்தநல்லக்நமன்ன
விதியுடன்பண்ணியந்த விதங்களாற்கீர்த்தியாகிற்
பதியும்லட்சுமியாளன்னேன் பாரிசம்படருவாளே. ௧௧

குருபுதன்பத்தின்கோடான் கூடியேபிலவானுக
முருகுடனுகமான சக்கரமுழுதுமுய்ப்பா
னிருவருநதானக்கோனி லிருநதிடராகுதாறு
மருவியேகூடிநின்று வாழ்ந்திடிற்றன்மத்தானே. கஉ

புதனுச்சமாகிக்கேது தன்னொடும்புறந்தவல்லா
விதமுடன்வந்தோன்கூட வணங்கிடப்பத்தின்கோனும்
பதமுடனிவர்கள்கூடிப் பதிந்திடப்பிறந்தபிள்ளை
விதம்விதமானயாகம் யாவையும்விளைப்பனுமே கந

அதியுச்சமாகப்பத்தோ னதிபனோடெழுக்காம்புந்தி
மதியுடனேழிற்கூடி வாழுனிச்சயமேயாகம்
புதனுடனிராகுகூடிப் பொருந்தவேபதிலானு
விதமுடனல்லகன்ம மிணங்கிடாதுஷிப்பானே. கச

பத்தினுக்குடையோனுறி லெட்டினிற்பன்னிரண்டின்
முத்திடனீரோதகன்ம மென்னவுமொழியலாகு
முத்தமன்பதத்துக்கோடா னுதன்புதனிராகுகூடி
லொத்திடக்கன்மத்தேக வுயர்ந்தநேசஞ்செய்வானே. கரு

நவமதிற்பத்துக்கோடா னுடிடப்பாக்கியத்தோன்
றவகுருலக்கநாதன் றன்னொடுகன்மக்கோனு
மவர்களும்பிலவானுக விருந்திடக்குணவான்றன்மம்
பவமிலாசாரன்கன்மம் விதியொடும்பண்ணுவானே. கசு

பாக்கியத்தானமேழும் பத்தொடுமைந்துலக்ந
மாக்கமாயிந்திராதி தனிற்சுபரல்லாற்பார்க்க
வாக்கொடுமந்தராசிக் குடையவன்பிலமாய்வாழ்ந்தார்
தீர்க்கமாய்ச்சகலசத்து வங்களுஞ்சுத்தன்யாகன். கஎ

பாக்கியத்ததிபன்பததுக் குடையவனிலக்கநாத
னாக்கமாம்விவாழம்புந்தி யிடதிசையபகாரத்தி
லாக்கமாஞ்சற்கணமங்க ளாசராமியாகளூாநங்
தீர்க்கமாம்வித்தையெல்லாந் திட்டமாய்ப்பிலக்குந்தானே. கஅ

சந்திரற்குமூன்றுந் தானமேசலராசியாகி
வெந்ததமன்னங்களாலு மிடிந்தடனவிழுந்துமேபானு
லந்ததன்மட்டிங்கடன்னை யழகொடுபுதிகாய்க்கட்டி
வந்தபேர்தனக்குவேண்டும் பொருளெல்லாமைந்தன்செய்வன். கக

பத்தினுக்குடையோன்கோபு ரங்கிசம்பரிவாயேற
மெத்தநற்குணமும்வாவி கிணருடன்வெட்டிவைப்ப
னொத்தநற்கன்மத்தானே யுயர்நவராசிக்கோட்கண்
மற்றொருபிலமாயாறு சாத்திரம்வகையாய்ச்சொல்லே. உ௰

ஐந்துகோணலிற்கோடா னமர்ந்தொன்றுய்க்கூடிகேந்திர
மூந்திடத்திரிகோணத்தி னுயர்பிலனுகிவாழ்ந்தாற்
புத்திசந்திரன்வியாழம் புகர்கதிசேபிலக்கிற்
சந்தவான்பிறந்தானென்னு மல்லதுதவசியாவன். உக

உரைத்திடுஞ்சாதகர்க்கு முருபிலஞ் சொன்னதல்லால்
விருத்தனாய்மலைகடன்னில் விரும்புவன்குகைசஞ்சாரந்
தரிததுமேபிச்சைசன்னி யாசியாயேகதண்டம்
பெருத்தஞானங்கள்பார்ப்பான் பெரியவன்ராசயோகன். உஉ

பத்தினின்மூன்றுகோட்கள் பரிவுடனுச்சவர்க்க
மொத்துடன்கன்மக்கோடா னுயர்பிலமாய்ச்சந்நியாசி
யுற்றபத்ததிபனுக்கு முடையவனீனமானாற்
சற்றுமாசாரமில்லா னென்னவுஞ்சாற்றலாமே. உ௩

ஆக்கமாய்ப்பத்தின்கோடா னருள்பிலவீனமாகி
வாக்கினுக்குடையோனேழின் மன்னவனவர்களோடு
தாக்கிடச்சந்நியாசி தப்பிதமில்லையென்னோர்
பாக்கியத்திரிகள்கைம்பெண் டன்னொடும்பரிவாய்க்கூடும். உ௪

சூரியன்சனிசெவ்வாயுந் தொடர்ந்துபோயிரண்டிற்கோடான்
காரியமைந்தினுதன் றன்னொடுங்கலந்துநின்றால்
வீரியந்தன்னைநீக்கி வெறுத்துசந்நியாசியாவான்
சீரியதிரிகள்கைம்பெண் டன்னையுந்தீண்டானென்னே. உரு

ஆதித்தன்சுபர்களங்க மாயுச்சவர்க்கமல்லாற்
பேதித்தகிரகமெல்லாம் பின்னையுங்கதிரைப்பார்த்தாற்
சாதித்தான்வாலிபத்திற் சந்நியாசியாகச்சார்ந்து
போதித்தஞானயோகம் பொருந்துபுண்ணியவானாமே. உசா

சுக்கிரன்சந்திரலக்க நாதனைத்தொடர்ந்துபார்த்தால்
மிக்கசந்நியாசியாகித் திரவியம்விரும்பான்சாற்று
மிக்கவருச்சமாக விருந்திடமதியாற்பார்க்கத்
தக்கசந்நியாசியாவ னன்றியுந்தனவானாமே. உஎ

சொன்னவிம்மூன் றும்பேருங் கூடியேசுகயாய்வாழ
வன்னவர்தன்னைமற்றுங் கிரகமுமடவாய்ப்பார்க்கத்
தன்னிலைசயபகாரங்க டன்னிபிற்சந்நியாசியாவ
னென்னவேயுரைத்தார் நூலோ ரெழில்பெருதனத்திறனே. ௨அ

சந்திரன்மைந்தனின் றோர் சார்ந்திடுராசிதன்னை
வந்தலக்கினத்துநாதன் பார்க்கத்தீட்சதனுமென்னு
மந்தூன் றிரேகாணராசி மண்மகனிருக்குமோரை
யந்தத்தானத்திற்காரி யம்புவியுறச்சந்நியாசி. ௨௯

குருசனிசெவ்வாயின்றோர் கூடுமோராசிதன்னைப்
பரிவுடனிவர்கள்பார்க்க வல்லதுபதிந்துகூட
வருநவமதிலேபொன்னன் வந்திடராசனல்லாற்
பெரியசந்நியாசியாவ னென்றுநாம்பேசலாமே. ௩௰

மதிநவமதிலேவாழ மறந்திடக்கிரகப்பார்வை
யதிசயராசயோக மாகியேகோட்கள்வாழ்ந்தால்
விதியொடுதன்மஞ்செய்து மிகுந்ததீட்சதனுமென்ன
விதுவலால்ராசனுவ னென்பதையியம்பலாமே. ௩௧

சந்திரன்வியாழமிலக்கினந் தன்னையேசனிதான்பார்க்கச்
சொந்தமாயொன்பான்பத்திற் றோன்றிடுகுருவேயானால்
விந்தையாய்ராசயோகம் விளங்கிடராசனல்லால்
வந்தசந்நியாசியாகி மனைதொறும்பிச்சையேற்பான். ௩௨

நவமதினீலன்வந்து நாடிடமற்றக்கோட்க
டவமொடுவன்றோன்றன்னைச் சசியினுநோக்கமின்றிப்
பவமறராசயோகம் பதியதீங்கதனால்ராச
சிவன்செயலெவர்க்கானாலுந் தெரியுமோசிந்தைநோவான். ௩௩

பத்தினுக்குடையோனாலு பேருடன்பரிவாய்க்கூடி
யுற்றகேந்திரத்திரிகோணந் தன்னிலேயுலாவிநின்றாற்
பெற்றசாதகன்சந்நியாசிப் பெருமையால்மோசனுவா
னுற்றகன்மத்தினாலு கோளுறின்முனிவன்றானே. ௩௪

சனியையலக்கினத்தினாதன் சந்திரோடுமவரைப்பார்த்து
புனிதமாய்க்கோட்களெல்லாம் பொருந்தவேபாரதாகி
லினியகனமத்திலக்ன நாதனுன்னிருக்கவல்லான்
மனத்தொடுபத்துக்கோடா னுவிற்சந்நியாசியாவன். ௩௫

சந்திரன்றன்னைநீலன் சுபரொடுபார்க்கமந்தன்
வந்திடுதிரேகாணம்போக போடச்சந்நியாசியாவன்

வந்தனன்மாற்றானோடு மந்திரிராகுகூடில்
விந்தையாய்ச்கொரேவங்க மேவச்சந்நியாசியாவன். ௩௬

கன்மத்தாநீசவத்த மனங்களாய்க்கண்டுநிற்க
வன்மத்தாற்பத்திற்செவ்வா யாவதுமந்தன்வாழ
சென்மசாதகனுய்வந்தோன் செகத்திற்சந்நியாசியாகி
பின்பத்தாற்கரபானங்க ளியல்புடன்செய்வானன்றே. ௩௭

பதிந்தசீவனங்களெல்லாம் பகலவன்முதலாய்த்தந்தை
பிதந்திநிசகோதரங்க ளியல்புடைத்தாயார்மற்று
மந்தருலக்கினத்தை மதியொடுபத்தின்கோட்டான்
முதிர்ந்தவங்கிசங்கள்பார்த்து முயலுஞ்சீவனங்கள்சொல்லே. ௩௮

கன்மத்தானத்தினுதன் கதிமாங்கிசத்திலேறத்
தன்குணத்திருகுதாள சமுத்திரயாபாரத்திற்
பொன்திரவியங்கண்முற்றும் பொருந்தியயாபாரங்க
ளன்புறுசிங்கந்தூறு மானசீவனமாய்வாழ்வன். ௩௯

சந்திரன்வங்கிசத்திற் சநிரொடும்பத்தின்கோடான்
வந்திடச்சிலத்திற்புத்தி யாய்வருபதார்த்தத்தாலும்
விந்தைவேளாண்மைதன்னால் விநோதமாம்வித்தைதன்னாற்
றந்தரசாக்களானோர் தலைமையுறுசரித்துவாழ்வன். ௪0

பத்தினுக்குடையோன்செவ்வா யங்கிசம்பதிந்துவாழ்ந்தாற்
சந்தியாய்ப்பூமியாலே சண்டையின்விபரத்தாலு
மற்றுளகுணத்தாலங்கிசம் வாதத்தாற்கனவினாலு
மெத்தவேகலகத்தாலும் விளங்குசாகசத்தாற்சீவன். ௪௧

புதனவாங்கிசத்திற்பத்துக் குடையவன்பொருந்திவாழ்ந்தால்
விதமொடுசிற்பவித்தை விதியொடாகமங்களாலு
மிதமிகுகணக்கான்ஞான வேதத்தின்வகையாலெய்யாற்
சிதனாதசோதிஷத்தாற் சொல்லும்புரோகிதத்தாற்சீவன். ௪௨

குருவவாங்கிசத்தாற்கன்மங் கூடவேதியனுய்த்தெய்வத்
திருவுளப்பொருட்டான்மிக்கச் சிவபுராணங்களாலு
மருவுசாத்திரத்தால்வேத வகையாகமத்தாற்றானம்
பெருமையாலுபதேசத்தாற் பேசமார்க்கத்தாற்சீவன். ௪௩

வெள்ளியினவாங்கிசத்தில் விளங்கிடப்பதியின்கோடா
னுள்ளதாய்ப்பொன்மாணிக்க முயர்பரிகரியாலிந்தக்

கள்ளயாபாரங்கண்டு சர்க்கரைதயிர்வங்கத்தாற்
பள்ளிகொளிலைதன்னுற் பெண்களினிடத்தாற்சீவன். ௪௪

சனிசுவாங்கிசத்திற்கர்ம்மன் சார்ந்திடக்கபடுமார்க்கத்
தினிமரம்வேடம்விற்றுச் சினைத்துடன்கட்டியாலு
மினியகற்கணக்காயன்ய வன்னியத்தியல்வாயாலு
மனிதரைப்போட்டிசெய்து வயிரத்தால்வாழுஞ்சீவன். ௪௫

ஒன்றுநான்கேழிபத்தி லுற்பவரோடும்வாழ்ந்தான்
மன்றினினீசத்தேழின் பலைவிஞால்வாழுஞ்சீவ
னன்றியல்கேந்திரகோண லூபமேநண்ணுமாகில்
வென்றருத்திரத்தால்ராசப் பிரியத்தால்வழங்குஞ்சீவன். ௪௬

சொன்னவித்தானந்தன்னிற் சுகமொடுசுபரேவாழ
மன்னவன்கீர்த்திமானாய் வணங்கியேகுணவானாகப்
பொன்னொடுதிரவியங்கள் புகழ்மன்னர்பிரியத்தாலு
மின்னியகுணமதான வித்துவமதனாற்சீவன். ௪௭

பத்தினிலிருந்தோன்பத்தி லங்கிசம்பரிந்துவாழ்வோ
னுத்தமசுபராப்புண்ய வானெனவுலகிலோது
மொத்தகன்மத்திற்பாப ருறுதியங்கிசமேயானாற்
சற்றுநற்றர்மம்பண்ணான் சகலரும்பவனேயென்பார். ௪௮

சந்திரலக்கினத்துக்கிந்தச் சங்கையால்பலனேதென்றான்
முந்தியேயுரைத்ததானப் பலனையுமொழியீரென்ன
வந்தபத்தாமிராசி யங்கிசத்ததிபன்பாபர்
வந்ததுமாதியோடே மருவமாபாவம்பண்ணும். ௪௯

மதிதனக்கப்பால்பத்தில் வருகதிர்செவ்வாய்வந்தாற்
சதிரோடுபாவபுத்தி சாரச்சாசுசமேசெய்யு
மதிசேய்வியாழத்தான மாசுவேவித்துவானாய்
பதியினில்ராசாவுக்குச் சரியெனப்பதிந்துவாழ்வான். ௫௰

சந்திரன்றனக்குப்பத்திற் சதிபொடுசுங்கனானு
லெந்தெந்தபோகமெல்லா மியல்புடைத்துய்ப்பானென்ன
மந்தனேவந்துவாழ்ந்தால் வருத்தனுய்த்துக்கனவன்
செந்திருவனையமாதே தெரிவதீதரிதுகாணே. ௫௧

அம்புலிதனக்குப்பத்தி லாதித்தன்செவ்வாயாகில்
வெம்பியமாதர்வேசை ஸ்திரீகளைவிரும்பநல்ல

னம்பியேவியாழஞ்சுங்க னயமொடத்தாகஞ்சேரிற்
றம்பிதான்கோபப்பெண்டீர் தானியுந்தனியேசேரும் ௫௨

திங்களுமப்பால்பத்திற் சேய்புதன்றிருந்திவாழ
மங்கவாயுதங்கடொட்டுச் சேமகமதனுற்சிவன்
சுங்கன்சேய்தான்பத்தானுற் றெழில்செய்வன்பாற்குக்கத்தன்
சங்கைபாஞ்சனிபத்தானுற் றரித்திரன்றனியேவாழ்வன். ௫௩

சொல்லியபத்தில்ராகு சனிபுதன்றேன்றிரின்றால்
வல்லியாமல்லார்மன்ன மன்னனென்றரசர்போற்று
நல்புதன்றிங்கள்சுங்க ளுடியேபத்தினன்ன
வில்லிடத்திரியும்வித்து வானெனவியப்பாய்சொல்லே ௫௪

பத்தினின்மந்தன்வந்து பரிவுடனிருந்துவாழ்ந்தாற்
புத்தகமெழுதச்சேர்க்கப் புகழ்விசேடத்தைப்பண்பான்
வித்தகமானவெள்ளி வியாழமும்விளங்கப்பத்தி
லுற்றபண்டிதனுய்ராசப் பிரியனுவுலகில்வாழ்வான். ௫௫

குருமதிநீலனென்றுய்க் கூடியேபத்திலேற
வருபலசுகந்தனீல யின்னுசொன்னத்தாற்கெட்டு
மெரிகதிர்சன்மத்தேறி யிடர்படுஞ்சனங்கள்சாடி
தெரிவதுகொஞ்சநெஞ்சந் தெளிந்தவனென்னுஞ்சிவன். ௫௬

பத்தினுக்குடையோன்வாழ்ந்து பதிந்திடுமோரையின்று
லுற்றநற்சுபராயன்றே ருடன்சுபருடனேவாழ்நாள்
பத்தனற்சுபறேபார்க்க வரிற்சுபவங்சமேற
வெத்தனையேனுஞ்சேனைக கவனிசமானுவானே. ௫௭

கன்மத்தானத்தானந்தக் காரியருடனேகூட
வன்மத்தாலட்டமாதி பதியவனவரைப்பார்க்க
வன்பற்றகொடூரவஞ்ச கெந்திரமேறுமாகிற்
சென்மத்தாலதிகவாதனை செய்திடுந்தேகனுவான். ௫௮

சந்திரன்கடகந்தனிற் சார்ந்திடச்சதிராய்ச்சுங்க
னந்தனனிவர்களியாரு மழகுடன்மதியைப்பார்க்க
வந்தபாராவதங்ச மானதிலேறிவந்தான்
முந்தமேவதிரவியங்க ளுதித்திடுங்கீர்த்திவானும். ௫௯

பத்தினுக்குடையோனல்ல பரிசுபருடனேயல்லா
லுற்றநற்சுபர்கன்மத்தி யத்திலேயூரில்வாழ
மெத்தனற்சுபர்களங்க மேவ்வேகீர்த்திமானுய்
வைத்தவிமானசுத்த னென்னவேவழங்கும்லோகம். ௬௰

கன்மத்தானத்திற்பாபர் கலந்திடப்பாபர்பார்க்க
நன்பத்தாமிடத்துக்கோடா னற்பிலவீனமாக
வன்பற்றுவறபதத்தா னுருந்தவ்கன்மவீட்டி
லின்புறுகாந்திகீர்த்தி யில்லைசாமென்றுசொல்லே. சாக

திருந்தியசெவ்வாயன்ஞேன் றன்னையேதிரும்பிப்பார்த்தோன்
பொருந்தியபிலவானுகப் புகழ்திரிகோணகேந்திரம்
விருந்திடப்பத்தின்கோனு மதியுஞ்சுக்கிரனும்பார்க்க
விருந்தவேளாண்மைலாப மடிமைமாடேனயாமால். சா௨

பத்தினுக்குடையோனெந்த வாங்கிசம்பதிகின்றுனே
வுற்றனவாங்கிசத்துக் குடையவன்சகிசம்பந்தஞ்
சத்துருத்தானநாதன் சார்ந்திடவல்லர்பார்க்க
மெத்தவெள்ளாட்டியாட்க ளடிமையுமிகவுண்டாமே. சா௩

சொல்லியலாபமந்த ராசியிற்றுேன் றுங்கோனை
நல்லவெய்யோன்ருயாதி நலமிகுநியாய்வர்க்க
மல்லல்செய்பிறப்புபுந்திப் பவமானவழிவற்கத்தா
மெல்லவேபிலமாம்லாபந் திரவியவிதங்கள்சொல்லே. சா௪

அந்தணன்லாபமீதி லடையவேயாகச்சாரம்
வந்திடும்வேதசாத்ர வகைதிரவியமுஞ்சேயாக்
கந்தரச்சுங்கன்லாபந் தோன்றிடவலங்காரங்கள்
விந்தைநாடகஞ்சங்கீதம் வித்தைகாவியமாமார்க்கம். சா௫

காரிலாபத்திற்றுேன்றக் காளும்வேளாண்மைதாங்ய
மூரிவெள்ளாட்டிபல்லுப் பறையுடன்முயன்றுசொல்லச்
சீரியவசுவலாபந் திரவியஞ்சேராய்த்தேடுங்
கூரியபரிவாற்பாவங் கொண்டென்றேடும்பொன்னே. சா௬

பாபருஞ்சுபருமாக லாபத்திலிருந்துவாழ்ந்தா
லாவதேதிரவியங்க ளதமத்தாற்றனமற்றுலுஞ்
சிவன்மால்குருவும்லாபஞ் சென்றிடவித்தைபுத்ரர்
தாவியவேந்துதன்றன் கிரியையாற்றனமுந்தேடும். சா௭

சொல்லியலாபமீதிற் றுேன்றியகிரகந்தன்னின்
மெல்லியவிட்டகோட்கள் விளங்கியபிலத்தைப்பார்த்து

நல்லசாதகர்க்குப்புத்தி நற்குணம்வாகனங்க
டுல்லியாபரணம்பட்டுத் திரிபுடைக்குத்தைச்சொல்லே. ௬அ

வாக்கினுக்குடையோன்லா மன்னவன்லக்னநாத
னுக்கமாயுட்டகோணா யமர்ந்திடத்திரவ்யலாபந்
தாக்குநற்கன்மந்தெய்வம் பிராமணன்றனக்குப்பத்திற்
போக்கிலேபாவம்போகம் பொருந்தவேதானஞ்செய்வோன். ௬௯

சொன்னலாபத்திற்கோட்க டோன்றிடப்பிலமோவீர
மென்னநீசமமாம்ராசிக் கிரகமாயெட்டிராறு
முன்னமேயிருமூன்றுக்கு முதல்வனுச்சர்தகர்க்கு
மன்னமேரேகாயோக மாகவுந்தினமும்பிச்சை. ௭0

லாபத்தான்லாபமீதுற் றிருந்திடவியல்பான்வெய்யோன்
லாபத்தான்மதியுங்கூடி யூறிடப்பலனைதென்னிற்
சோபத்தினலேராசா வென்னவுஞ்சொல்லலாமே.
வோபத்தையனையாயிந்தக் குறியறிந்தினிதுகூறே. ௭௧

திருந்தியசெவ்வாய்லாபஞ் சேரமந்திரியாம்புத்திப்
பொருந்தியேவிவசாயத்தாற் போதவேபணமுந்தேடும்
மருந்தெனவியாழம்புந்தி வரலாபமீதுவித்தை
வருந்தியவேந்துபுத்ரர் வணக்கமாஞ்சாதியாசான். ௭௨

குருவுடன்சுங்கன்கூடிக் குணமொடுலாபங்கொண்டால்
வருபலனிரத்னம்யானை வலபரிபசுக்களெல்லாந்
தருநலதிரியுஞ்சாருஞ் சனிலாபந்தாண்டகக்கண்டா
லருளிலாப்பொல்லாக்கன்ம மாகவேநடந்துகொள்வான். ௭௩

கெந்திரத்ரிகோணந்தன்னிற் கெழுமியேலாபக்கோடான்
சார்ந்திடுலாபமீதிற் றருபவரிருக்கவின்னோர்
வார்ந்திடுமுச்சவர்க்க மாத்திரவியங்களெல்லாஞ்
சேர்ந்தகோடங்கடங்க டிசைவரிற்சேருமாதே. ௭௪

பதினோராம்பாவம்-முற்றிற்று.

## பன்னிரண்டாம்பாவம்

வியமதற்குடையநாதன் வியத்தையுஞ்சநியும்பார்த்து
நயமுறத்தூரதேச நடப்புநன்றில்லாகீர்த்தி
தயவுடன்றூதாவாகிக் கொடுப்பதுஞ்சயனந்தானும்
பயமுடன்திரவியங்கள் செலவுடன்பரிவாற்சொல்லே. க

சொல்லியபன்னிரண்டும் சுபசாதகிரகமாக
வில்சரராசியாக வீராறுறெட்டாறுக்கு
நல்லவனதிலேவாழ நாடியேசநியுங்கூட
லல்லதானீலன்பார்க்க வவன்றேசங்காட்டுக்காவான். உ

வியமதற்சுபரிருக்க விரும்பியேசுபருங்கூட
தயவொடுதிரவியத்தைச் சதிரொடுந்தியாகஞ்செய்வான்
பயவருட்டங்களான கிரகங்கள்பதியப்பார்க்க
நயமிலாத்துன்மார்க்க ஞுடியேசெய்வன்பொன்னே. ௩

சொல்லியபன்னிரண்டிற் றேன்றியகிரகத்துக்கு
வல்லசாதகனுனுலும விருமிலவானனுகும்
னல்லசாதகருக்கன்னேர் நற்றிசையுபகாரத்தின்
மெல்லவேதிரவியங்கள் வெகுசெலவாகுமென்ன. ௪

ஆறெட்டுக்குடையோன்பாவ ராயப்பிலவீநமாகி
ராறிவ்வேளாண்மைதன்று லூறுதிரவியங்கள்சேதங்
கூறியவ்வியத்திலுலு கிரகங்கள்கூடமாகி
னீறெனவடியார்தாமு னிச்சயனுசமாமே. ரு

வியந்தனில்வேதக்கோட்கள் விளங்கிடயிருந்தானென்ன
வியறிருகிரகங்கூடி யிருந்திடவியத்திலல்லாற்
றயவினுனற்கோள்பன்னி ரண்டினிற்சாதகர்க்கு
நயமிகுமங்கியோங்கிய மவர்களாற்றிரவ்யநாசம். சா

சொல்லியதானந்தன்னிற் சுமர்லநிற்றியாகியாவ
னல்லுணவன்வேளாண்மை நன்மையாந்தன்மஞ்செய்வா
னில்லையாலவியத்திறபாப ரிருந்திடவிகாரதநா
லல்லவேகிரகமாட்சி யாயபகாரியன்றேன் எ

சூரியன்மதிதான்பன்னி ரண்டினிற்றேன்றினின்றூற்
சீரியராசயோகஞ் சேரினுந்திரவ்யநாசங்
காரியச்செவ்வாய்திங்கள் கலந்துடனிருக்கப்பார்க்க
வீரியத்தாலுநானு விதத்திலுந்திரவ்யநாசம், அ

அந்தணன்றிங்கள்பங்க னறிவொடுவியத்திலேறச்
சிந்தையாற்றேடும்பொன்னைத் திருந்தரட்சிப்பனென்ன
விந்தையால்வியத்திற்சுங்கன் மேவிடசுபருங்கூடச்
சந்தமாய்ச்சுபரும்பார்க்கச் சயனத்திற்சுகவான்றுக்கே.

அதியுச்சபாகந்தன்னி லமர்ந்திடவியத்தானத்தோன்
பதியவேதுங்குமஞ்சம் பதிந்திடச்சயனஞ்செய்வ
னிதுவலாற்பாக்கியத்தோ னியல்புடனவனைப்பார்த்தாற்
புதுநவமணிகளாலே பூஷணமிகவுண்டாமே.

இட்டமாய்ச்சுங்கன்மந்தன் மதியொடுமிவர்களாமே
வட்டமத்துக்குமப்பா லாகியதிரிகோணத்தின்
முட்டியேவந்தோர்க்கெல்லா மாவதோராசயோகந்
திட்டமாயிதனைப்பார்த்துந் திடம்படத்தேர்ந்துசொல்லே.

சுக்கிரன்பாபரோ டுங் கூடியேவியத்திற்றேய்ந்தான்
மிக்கதாய்த்திரியுந்தானும் விரும்பியேசயனஞ்செய்வன்
மிக்கசேய்சுங்கனோடுங் கூடியேவியத்தில்வீழ்ந்தால்
வட்கையும்பலனுந்தானு மறந்துபோய்விழுந்துபோமே.

மந்தனும்ராகுவுட்ட மாதிப்ன்வலுவதாக
வந்திடவியத்தானத்தின் மருவிடச்சாதகர்க்கு
முந்தவேநாகலோக மென்னவேமொழிதலல்லால்
விந்தையாய்ரவரவாதி நரகத்தில்வீழ்வான்பின்னே.

உதயத்தானத்தின்வின்னி னுடுபதிபார்த்தானுகிற்
பதியைத்தானிழந்துதந்தை பரகிரகத்திலண்பன்
விதியற்றகாமத்தெட்டி லொண்டதில்வெய்யோன்மேவிற்
பதியற்றனுபயமொன்னார் பாராமயனூறுமென்னே.

சத்துருத்தானக்கோடான் றூண்டியேவியத்தானத்தைப்
பத்திடப்பார்க்கவந்தப் படிநரகத்திற்பாய்வார்
சொற்றமிழாகவிந்தச் சூதிரனுசெகத்திற்றோன்ற
வித்தகன்வேதலிங்கப் பட்டர்காம்வளமபனுற்றூர்.

பனிரண்டாம்பாவம்-முற்றிற்று.

ஆகசெய்யுள்-௧௨-க்கு பாடல்-௱௮.

துய்யகேரளம்-மூலபாடம்

முற்றிற்று.

T. 6581